சென்னை

# கொங்கு

நண்பர்கள் மலர்

2025

சர்வதேச
கூட்டுறவு
ஆண்டு



# SKC

**எஸ்.கே.சென்னியப்பகவுண்டர்**

கூட்டுறவுச் செம்மல்

ஏர் 10 • உழவு 6 • திருவள்ளுவர் ஆண்டு 2056 • விலை ரூ20/- • ஜூன் 2025 (ஆனிஆடி)

Chennai Kongu Nanbargal Malar




AMMA NAANA




**Mr. V. R. Govindasamy**
**Mrs. G. Rajam**
Founders
**Ph: +91 94443 99199**

**M. Senthilraj**
CEO
**Ph: +91 94443 99998**

# ECR
# MRC NAGAR
# MADURAVAYOL

**No.100, Chamiers Road,**
**Teynampet,**
**Chennai - 600 018.**

**+91 98843 09993**

**ammanaana.staff@gmail.com**




# படித்தோம் இரசித்தோம்



"புதுப்பொலிவும் புத்தாக்கமும் கொண்டு வாசிக்கத் தூண்டும் மேம்பட்ட வடிவமைப்பில் மிளிரும் 'கொங்கு நண்பர்கள்' சங்கத்தின் புதிய இதழை உருவாக்கிய நிர்வாகிகளுக்கு என் நெஞ்சார்ந்த வாழ்த்துகள்."

டாக்டர் என்.எம்.வீரையன்
சவீதா பல்கலைக்கழகம்
நிறுவனர் மற்றும் வேந்தர்

SAVEETHA UNIVERSITY



மின் இதழ்கள் உலா வரும் இக்காலத்தில் நம் கரங்களில் தவழும் இவ்விதழின் ஒவ்வொரு பக்கமும் அழகோ அழகு! அற்புதமான வடிவமைப்பு!!

டாக்டர் பி.சி. துரைசாமி,
& டாக்டர் சாந்தி துரைசாமி
தலைவர் & மேலாண் இயக்குநர்

SAKTHI MASALA

இளைஞர்களுக்கு வழிகாட்டியாக விளங்குவது எஞ்சின் மேன் ஆர். வேலுசாமி அவர்களின் வாழ்வு! இதழின் வடிவம் தேர்ந்த சிற்பியின் கை வண்ணத்தில் செதுக்கிய சிலையைப் போல் உள்ளது



K.R.நாகராஜன்,
ராம்ராஜ் காட்டன்
நிறுவனர் மற்றும் தலைவர்

RAMRAJ COTTON CULTURE OF INDIA

## சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

### நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

**தலைவர்**
**V.K.செல்வக்குமார்**
Chennal Mettex Lab Pvt. Ltd.
98410 78949

**செயலாளர்**
**M.அமராபதி**
Jairram Hi-Tech Products
94440 60885

**பொருளாளர்**
**C.கொங்குவேள்** Dharani Developers P.Ltd., (PGP Group)
98408 90034

**துணைத் தலைவர்கள்**

**R.சண்முகவேல்**
Sunbright Designers Pvt. Ltd.,
98410 22960

**V.P.வீரப்பன்**
Sengam Transport
94432 66610

**இணைச்செயலாளர்கள்**

**C.அரவிந்தன்**
K Labs Technology & Solutions Pvt. Ltd.,
98419 23808

**P.ரவி**
SKV Educational Institution's
9842754245

### செயற்குழு உறுப்பினர்கள்

**அருள் பொன்னுசாமி**
Ponmani Engineers Pvt. Ltd.,
9884022266

**V.R.பாலசுப்பிரமணியன்**
Advocate & Labour Law Consultant
94444 04593

**S.அன்பழகன்**
BISMARCK Business Network Advisor (India, UAE, Hong Kong)
98403 09394

**K.ஜெகதீசன்**
Unitech Gorup
91767 17131

**S.சீனிவாசன்**
Prim Drugs & Pharmaceuticals I.Pvt., Ltd.,
94440 18021

**N.P.இசையழகன்**
Ms. Esal & Co. Chartered Acou
94444 04595

**R.கந்தகார்த்திக்**
RKG & Sons Associates
90036 90695

**கதிர்வேல் கணபதியப்பன்**
ISSM Business School
98840 22255

**K.G.ஜோதீஷ்குமார்**
Athiappa Chemicals (P). Ltd.,
9442488000

**A.நடராஜன்**
NU-Tech Components
9789973123

**K.ஜெகன் நாதன்**
Sri Krishna Power Loom Society
94437 42696

**K.நித்தியானந்தன்**
Sri Devkrish Group
98422 29503

**விசா M.சன்முகம்**
Sri Ambika Nets
9944933311

**S.குணசேகர்**
BRT Spinner Pvt. Ltd.,
9366635141

**T.P.நடராஜன்**
V.M.D. Groups, Chithode
9842766789

**D.மாணிக்கவாசகம் சிவப்பிரகாசம்**
RAWS N-Greens Health Care (P). Ltd.,
9443745879

**பரமேஸ்வரி சின்னசாமி**
P&C Projects (P) Ltd.,
9444070033

**Dr.சண்முகப்பிரியா MBBS**
AGS Complex & Ware Houses,
7824880456

**தணிக்கையாளர் R.பாலசந்திரன் CA**


பதிப்பாளர்
கொங்கு நண்பர்கள் சங்கம்,
வெள்ளி விழா இல்லம்,
எண். 34 ஸ்ரீநிவாச பெருமாள் சன்னதி 1-வது தெரு,
ராயப்பேட்டை, சென்னை - 600014.


ஆசிரியர் குறிப்பு
வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / சென்னை கொங்கு நண்பர்கள் மலர் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச் சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை. நேர்காணல்களும், சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துகளும் அவரவர்களின் சொந்தக் கருத்துகளே.

# தலைவர் மடல்

அன்புடையீர் வணக்கம் நலம் நலம் பல விழைகிறேன்.

கோடை விடுமுறை முடிந்து நமது பிள்ளைகள் பள்ளி கல்லூரிகளுக்கு குதூகலமாய் செல்லத் துவங்கி இருப்பர்.புதிய கல்வி ஆண்டை இனிதே வரவேற்று மகிழ்வோம். கோடையில் அக்னி நட்சத்திர வெயில் சுட்டெரிக்குமோ என்று அச்சப்பட்ட வேளையில், தமிழ்நாடெங்கும் பரவலாக மழை பெய்து வெயிலை தணித்தது மனதுக்கு மிகவும் இதமாக இருந்தது. உழவர்களுக்கும் உவப்பாக இருக்கிறது.

“உலகமெல்லாம் பருவ மழை ஒத்தபடி பெய்யட்டும்
உழவரெல்லாம் தானியத்தை உவப்புடனே பெருக்கட்டும்
பல தொழில்கள் புரிகின்ற பாட்டாளி உயரட்டும்
பகுத்துணர்வில் தொகுத்துணர்வுப் பண்பாட்டை உயர்த்தட்டும்”

என்ற வேதாத்திரி மகரிஷியின் வாக்குப்படி பருவ மழை ஒத்தபடி பெய்து வாழ்வு செழிக்கட்டும்!



இந்த ஆண்டு உலகில் சர்வதேச கூட்டுறவு ஆண்டாக கடைப்பிடிக்கப்படுகிறது.

ஈரோட்டில் எஸ்.கே.சி. ரோடு என்று அழைக்கப்படும் சாலையைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. ஆனால் அந்த எஸ்.கே.சி. என்பவர் யார் என்று தெரிந்தவர்கள் பலர் இருப்பார்களா என்பதும் தெரியாது. இந்தக் கூட்டுறவு ஆண்டில் “கூட்டுறவுச் செம்மல்” எஸ்.கே.சி. என்று அழைக்கப்பட்ட எஸ்.கே.சென்னியப்ப கவுண்டர் அவர்களை மறக்க இயலுமா? ஈரோடு நகரத் தந்தையாகவும் கோவை மாவட்ட கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் சிறப்புடன் பணியாற்றிய நேர்மையும் கண்டிப்பும் மிகுந்த எஸ்.கே.சி. அவர்களைப் பற்றிய கட்டுரையே இம்மாத இதழின் அட்டை சொல்லும் சேதியாக இடம் பெற்றுள்ளது.

நூல் நயம் பகுதியில் இடம்பெற்றுள்ள கொங்கு நாட்டு மகளிர் என்ற புத்தகத்தை நமது புலவர் செ. இராசு அவர்கள் இயற்றியுள்ளார். அன்று முதல் இன்று வரை என்றுமே அனைவரையும் அரவணைத்துச் செல்லும் பாங்கு கொங்கு இன மக்களுக்கு என்றும் உண்டு என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம் அமைந்துள்ள கட்டுரையே குப்பநாச்சி! ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்’ என்பது போல கொங்கு நாட்டு மகளிர் புத்தகத்திலிருந்து அக்கட்டுரையை வெளியிட்டுள்ளோம். வாங்கிப் படித்து பயன் பெறுங்கள் என அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

வழி தவறிச் சென்றால் வளமான கவிதை கிடைக்குமா? ஆம் கிடைக்கும் என்பதற்கு உதாரணம் தான் இன்னொரு தாய் என்ற கவிதை! நமது இதழ் வழி தவறி திரு.ஆனந்தகுமார் இ.ஆ.ப. அவர்களின் அஞ்சல் பெட்டியில் விழுந்திருக்கிறது. அதைக் கண்ணுற்ற அவர் படித்துப் பார்த்து வியந்து பாராட்டி நானும் ஒரு கவிதை தருகிறேனே என்று நமக்கு கொடுத்த இன்ப அதிர்ச்சி தான் இன்னொரு தாய் என்ற கவிதை! சுவைத்துப் பாருங்கள் சுடச்சுட தோசை வார்த்துத் தந்த அத்தையின் அருமையை!

இரத்த சோகை போக்க என்ன வழி என்பதை முத்தான தமிழில் சத்தான கட்டுரையாக நமக்கு வழக்கம் போல் வழங்கி இருக்கிறார் முதியோர் நல மருத்துவர் வி எஸ் நடராஜன் அவர்கள்!

இந்த ஆண்டின் குடும்ப விழா நமது முப்பெரும் பல்கலை வேந்தர் சவீதா டாக்டர் வீரையன் அவர்களின் பல் மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள எம் எம் கன்வென்சன் சென்டரில் வரும் ஜுலை மாதம் 27 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற உள்ளது.

விழாவிற்கு அனைவரும் அணியமாகுங்கள் என அன்போடு வேண்டுகின்றேன்.

அன்புடன்



**வீ.க.செல்வக்குமார்**
தலைவர்



சென்னை

# கொங்கு நண்பர்கள் சங்கம்

(பதிவு எண் : 282/76)



## கொங்கு மகளிர் விடுதி



Sharing Room | Double Cot
CCTV | Wifi | Safety Secure
Bathroom Heater | Water Dispenser
Washing Machine | Two Wheeler Parking

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14
**chennaikongu@gmail.com**
**Ph : 044 - 4266 8046, Cell : 63839 85919**

## தங்கும் விடுதி




"தீரன் சின்னமலை மாளிகை"
நெ,72, பீட்டர்ஸ் ரோடு
இராயப்பேட்டை,
சென்னை-600 014.
**chennaikongu@gmail.com**
**Ph : 044 - 4266 8046**
**Cell : 93815 45451**

AC Rooms | Double Cot
TV | CCTV | Wifi | Safety Secure
Bathroom Heater | Water Bottle
Towel | Water Dispenser

**Discount for Members**

## கொங்கு மாணவர் விடுதி




Double Cot
CCTV | Wifi
Safety Secure
Bathroom Heater
Water Dispenser
Washing Machine
Two Wheeler Parking

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப் பெருமாள்
சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14.
**chennaikongu@gmail.com**
**044 - 4351 0460 | Cell : 63839 85919**

# செயலாளர் கடிதம்

கொங்கு சொந்தங்களுக்கு வணக்கம்...

கடந்த இரண்டு வருடங்களாகக் காத்திருப்பில் இருந்த சங்கத்தின் பதிவுப் பணிகள் முடிந்து விட்டன என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது சங்கத்தின் வருடாந்திர விளையாட்டு விழா வரும் 20/7/25 அன்று சென்னை பூந்தமல்லி சவீதா பல் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நடைபெற உள்ளது.

கொங்கு சொந்தங்கள் அனைவரும் தங்கள் குடும்பத்தினரோடு பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன். பள்ளி,கல்லூரிகளில் படிக்கும் தங்கள் செல்வங்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க ஊக்கம் அளிக்குமாய் கேட்டுக் கொள்கிறேன்! ஆண்டு தோறும் நடக்கும் நம் கொங்கு சொந்தங்களின் சங்கமிப்பான குடும்ப விழா வரும் ஜுலை 27 ம் தேதி பூந்தமல்லி சவீதா பல் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நடைபெற உள்ளது.



நமது சொந்தங்கள் நமது சமூகத்தில் தத்தம் துறைகளில் சிறந்து விளங்கும் கொங்கு சான்றோரை கௌரவிக்கும் ஒரு சிறப்பான தினம் நமது குடும்ப விழா என்றால் அது மிகையாகாது.

இதன் பொருட்டு தத்தம் துறைகளில் சிறந்து விளங்கும் சாதனையாளர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கிறோம்..வாகனப்புரட்சியை செதுக்கிய நமது சமூகத்தின் 'எஞ்சின் மேன்' திரு. ஆர்.வேலுசாமி அவர்கள் மஹிந்திரா எலக்ட்ரிக் ஆட்டோ மொபைல் லிமிட்டெடின் மேலாண்மை இயக்குநராக சீரிய முறையில் பணியாற்றி வருகிறார்.

அவரை அண்மையில் சந்தித்து கலந்துரையாடியது ஒரு மகிழ்வான தருணமாகும்.நாமக்கல் அருகில் உள்ள ஆண்டிப்பட்டி புதூரில் பிறந்த இவர் வாகனத்துறையில் சுமார் 28 வருடங்களுக்கும் மேலான அனுபவம் மிக்கவர்.

நிகழ இருக்கும் நமது சங்கத்தின் விளையாட்டு விழா மற்றும் குடும்ப விழா நிகழ்வுகளுக்கு உங்கள் அனைவரின் மேலான ஒத்துழைப்பை வேண்டுகிறேன்.விழா மலருக்கு விளம்பரங்கள் அளித்து ஊக்கமளிக்க உங்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்!

நன்றி வணக்கம்,

**எம்.அமராபதி**

செயலாளர்



SUN-X
CONCRETE
SUN-X CONCRETE INDIA PVT LTD
CHENNAI
OUR PRODUCTS
READY MIX CONCRETE | SOLID BLOCKS | AAC BLOCKS
AGGREGATE | FLYASH BRICKS
"Ramaniyam Ocean Isha", No11, 6th Floor, Old Mahabalipuram Road,Okkiyam Thoraipakkam,
Chennai - 600 096.
Call : 9003070704 | 9940400050
Email : sales@sunxconcrete.org
w w w . s u n x c o n c r e t e . o r g

# ஜாதகம் நமக்கு சாதகமா?

மஞ்சக்காட்டு வலசு தூசு

**ம.பெ. சுதந்திர குமார்**



பெற்றோர்கள் தங்கள் மகன்/மகளுக்கு ஒரு சரியான துணையைத் தேர்ந்தெடுப்பதில் திணறிப் போய் விடுகிறார்கள். எல்லாம் பொருந்தி வந்தால் ஜாதகம் பொருந்துவதில்லை. ஜாதகம் பொருந்தி வந்தால் மற்றவை உகந்ததாக இல்லை.

திருமணம் முடிவு செய்வதில் ஜாதகம் மிகப்பெரிய தடைக்கல்லாக இருக்கிறது. அதை மீறி செய்யவும் அச்சம்.

இந்த ஜாதகப் பொருத்தம் பார்ப்பதை வழக்கப்படுத்தியவர்கள் இன்று அதை விட்டு விலகிப் போக ஆரம்பித்து விட்டார்கள். பல ஆண்டுகளாக! ஆனால் நாம் அதை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டு ஊசலாடுகிறோம். பிறந்த வேளையில் இருந்த விண் மீன்கள்/கோள்கள் இவற்றின் நிலைகளை ஒரு துண்டுக் காகிதத்தில் வைத்துக் கொண்டு அறிவியலுக்கு சற்றும் பொருந்தாத முறையில் திருமணங்களை முடிவு செய்கிறோம்.

> இந்த ஜாதகப் பொருத்தம் பார்ப்பதை வழக்கப்படுத்தியவர்கள் இன்று அதை விட்டு விலகிப் போக ஆரம்பித்து விட்டார்கள், பல ஆண்டுகளாக! ஆனால் நாம் அதை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு ஊசலாடுகிறோம்.

இந்த முறையில் ஏகப்பட்ட சிக்கல்கள். நாமும் அவர்களைப் போல இனிமேல் ஜோடிப் பொருத்தம். மனப் பொருத்தம், குடும்பப் பொருத்தம், குணப் பொருத்தம் இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்போம்.

இந்த முடிவை ஏற்றுக் கொள்பவர்கள், வரன் தேடும் படிவத்தில், “எங்களுக்கு ஜோடி/ மனம்/ குடும்பம்/ குணப் பொருத்தம் மட்டுமே தேவை” எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பெற்றோர்களே, அச்சப்பட வேண்டாம். அறிவியலுக்கு ஒவ்வொதவற்றை விலக்கிவிட்டுச் செல்வதே முன்னேற்றத்துக்கு வழி. மீனாட்சியும், முருகனும் குல தெய்வமும், நம் குழந்தைகளுக்கு சரியான வழி காட்டுவார்கள்.

மீனாட்சி, தனக்கு பிடித்த சொக்க நாதருக்கு மாலையிட்டார். சொக்க நாதர் ஒரு சித்தர்.

முருகன் தனக்குப் பிடித்த வள்ளியை கரம் பிடித்தார். வள்ளி ஒரு வனவாசி அரசனின் மகள்.

மீனாட்சியும், முருகனும் எந்த ஜாதகமும் பார்க்கவில்லை.

> “அமுத சுரபி என்ற மாத இதழில் வெளிவந்த திருமண தகவல் மையத்தின் “ஜாதகம் இன்றி மட்டுமே பதிவு செய்யப்படும்” விளம்பரம் ஏற்படுத்திய தாக்கத்தினால், தனது ஏக்கத்தை வெளிப்படுத்தி இக்கட்டுரையை வரைந்து இருக்கிறார் மஞ்சக்காட்டு வலசு தூசு.”




# KRISHYA

*Kurti Manufacturers*

- Casual Kurtis
- Co-ord Sets
- Salwar Sets
- Maternity Wear

We are exclusively available at
reputed retail stores across Tamilnadu.

**• WE CATER TO WHOLESALE ORDERS ONLY •**

R.K FABS, No. 76, Sankari Bye-pass road,
near Ottanmethai, Agraharam(PO),
Pallipalayam, Erode - 638008.

**+91 9789973128**

rkfabsppm@gmail.com




# வாழ்த்துகிறோம்




25.05.2025 அன்று நடைபெற்ற சேலம் கொங்கு வேளாளர் அறக்கட்டளையின் 25 ஆம் ஆண்டு விழாவில், வெள்ளி விழா மலரை வெளியிட்ட விழாத் தலைவர் திரிவேணி குழும தலைவர் திரு. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள், முதன்மை விருந்தினர் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் கே.ஆர், நாகராஜன் அவர்கள், அறக்கட்டளை தலைவர் எஸ். முத்துராஜன் அவர்களுடன் சிறப்பு விருந்தினர்கள்!

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், கல்பாவி கிராமம், கந்தம்பாளையம் அருள்மிகு ஸ்ரீ சக்தி மாரியம்மன் திருக்கோயில் திருக்குட முழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாவில் 07.06.2025 அன்று ஆதன். பொன் செந்தில்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற காராளன் கம்பத்து ஆட்டம்!





2024 ஆம் ஆண்டிற்கான ஜமுனா லால் பஜாஜ் விருது பெறும் சக்தி மசாலா நிறுவனத்திற்கு நல்வாழ்த்துக்கள்!




# END TO END EXCELLENCE.

## Integrated Global Logistics Solutions

- ODC Logistics
- International Freight Forwarding
- Custom House Agent
- Chartering Services
- General Cargo Logistics
- Warehousing & 3PL
- Port Agency
- Value Added Services







Here is the reason

**WHY CHOOSE US**

- Over 25 years of trusted partnerships in building the India's industrial establishments.
- Positioned as 7th largest Specialized Fleet owner globally by ICT50 (2023)
- India's #1 Renewable Logistics provider and can move wind blades of the longest sizes.
- Emerged as a conglomerate with diversified businesses and a family of nearly 5000 people

**For Enquiry**

enquiry@ntcgroup.in

+91 44 66 888 777

**Corporate Office**

No.9, 8th Floor, Calavala's Centenary Center, Club House Road, Anna Salai, Chennai - 600 002, Tamil Nadu, India

www.ntclogistics.in



ஈரோடு வ.உ.சி. பூங்காவில் தண்ணீர்த்தொட்டி

# காவிரிக்குடிநீர்

தந்தை பெரியார் 1917 முதல் 1920வரை ஈரோடு நகராட்சி மன்றத் தலைவராக இருந்தார். அவரது பதவிக் காலத்தில் 26.5.1919 அன்று ஈரோடு மக்களுக்குக் காவிரி நீர் வழங்கப்பட்டது. தொடங்கி வைத்தவர் திவான் பகதூர் பி.இராஜ கோபாலாச்சாரியார் (CLE Member In Council Fort St. George, Madras), சிலர் இவரை இராஜாஜி என்றே தவறாக எழுதுகின்றனர்.

முன்பு காலிங்கராயன் வாய்க்காலில் இருந்துதான் ஈரோடு நகருக்குக் குடிநீர் வழங்கப்பட்டது. காலிங்கராயன் கால்வாய்த் தண்ணீர் மே 1 முதல் ஜூன் 15 வரை நிறுத்தப்படும். எனவே அச்சமயம் உள்ளிட்டு ஆண்டு முழுவதும் குடிநீர் வழங்கக் காவிரி நீர் பயன்படுத்த வேண்டும் என்று 1911ல்




நகராட்சிமன்றத் தலைவராக இருந்த டி. சீனிவாச முதலியார். அரசுக்குக் கடிதம் எழுதினார். இந்தத் திட்டம் குறித்து ஆய்வு செய்ய அரசு உதவி சுகாதாரம் பொறியாளர் அயர்லாண்ட் என்பவரை அனுப்பியது (Ireland, Assistant Sanitary Engineer-G.o.no.75 M.mis.dated 16.1.1912).

காவிரியாற்றில் இரு பாறைகட்கு இடையி லிருந்து நீர் பெற்று அளிக்கலாம் என்றும் அதற்கு ரூ.3.99,000/- செலவாகும் என்றும் திட்டம் அளித்தார். இத்திட்ட மதிப்பீட்டில் பாதித் தொகை நகராட்சி அளிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. நகராட்சி நிதி நிலமை பாதித் தொகை செலுத்த முடியாமல் இருந்தது.

உடனே டி.சீனிவாச முதலியார் ஏழை ஈரோட்டிற்கு உதவ கவர்னர் பென்ட்லேண்ட் அவர்களைக் கேட்டுக் கொண்டார் (Lord Pentland). 3,99,000/- ரூபாய் திட்டத்திற்கு அரசு 3,11,000/- ரூபாய் அளிக்க ஒத்துக் கொண்டது.

உடனே தலைவர் பொதுப் பணித் துறையை அழகிய முறையில் நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கக் கேட்டுக் கொண்டார். நற்பயனாக இரண்டாம் முறையும் டி.சீனிவாச முதலியார் நகராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திட்டத்திற்கு P.S. சிவசாமி அய்யர் 26.9.1914 அன்று அடிக்கல் நாட்டினார் P.s.sivaswamy



டி.சீனிவாச முதலியார்




Iyer, C.s.i., Cie, Member Of The Executive Council Of Fort Sl George, Madras).

1911 தொடங்கி 1916 முடிய டி. சீனிவாச முதலியார் இத்திட்டத்தில் தீவிரமாக செயல்பட்டார். 1917இல் நகர்மன்றத் தலைவராகப் பதவி ஏற்ற தந்தை பெரியார் 1919 ஆம் ஆண்டு திட்டத் திறப்பு விழாச் செய்தார்.

தொடர்ந்து நீராவி இயந்திரம் மூலமாகவே திட்டம் நடைபெற்றது. 1937 இல் ஈரோட்டுக்கு மின்சாரம் வந்த பின்னர் 1938 முதல் மின்சார இயந்திரம் மூலம் குடிநீர்த்திட்டம் இயங்கியது.

1914 இல் கால்கோள் நாட்டிக் கட்டப்பட்ட இந்தத் தண்ணீர்த் தொட்டி விபரம் தெரியாத சிலர் வ.உ.சி.பூங்காவில் பழங்காலக் கோட்டை என்று எழுதி உள்ளனர்.

(நன்றி : கொங்கு மாமணி புலவர் செ. இராசு)



# “இன்பத் தமிழமுது”

‘வே’ என்ற ஒற்றைத் தமிழெழுத்து அல்லது தமிழ்ச் சொல்லிற்கு ‘மறை’ (மறைத்து வைத்தல்) என்பது பொருளாகும்.

தாவரங்களின் வேரானது, மண்ணுக்குள் ஓடி மறைந்து கிடப்பதாலேயே அது ‘வே’ர் எனப்பட்டது.

மறைந்திருந்து தாக்குவதாலேயே அவன் ‘வே’டன் எனப்பட்டான். வேட்டையும் அப்படித்தான்.

சுற்றிலுமிட்டு மறைத்துப் பாதுகாப்பதாலேயே ‘வே’லி எனப்பட்டது. வேய்தலும் அப்படித்தான்.

சுடுநீரில் மூலிகைகளையிட்டு, அடர்த்துணி கொண்டு நம்மை மூடிமறைத்து, அதனை முகர்ந்து நோய்போக்கும் நிகழ்வு ‘வே’து பிடித்தல் எனப்பட்டது.

‘வே’ய்ங்குழல் எனச் சங்க இலக்கியங்கள் முதல் போற்றும் பெண்ணின் அடர்க்கூந்தல், அப்படியே அவளது முழுவுடலையும் கவிழ்ந்து மறைக்கக் கூடியதாகையால் அவ்வாறு கூறப்பட்டது.

நம்முடலின் பாகங்களையும், மானத்தையும் மறைத்துக் காப்பாற்றுவதாலேயே அவ்வுடை ‘வே’ட்டி எனப்பட்டது.

‘வே’தத்தைக் கூட “மறை” என்றுதான் தனித் தமிழில் கூறுகிறோம்.

கண்ணுக்கு தெரியாத அளவுக்கு மறைவாக விரைவாக செல்வதால் ‘வே’கம் எனப்படுகிறது.

உண்மைத்தன்மை தெரியாமல் இருப்பதாலேயே அது வே’டம்.

கசப்பு வெளியே தெரியாமல் உள்ளே மறைவாக இருப்பின் அது வே’ம்பு.

தகவல்: அழகன் கருப்பண்ணன், கோவை

இனிமைத் தமிழ்மொழி எமது
எமக்கின்பம் தரும்படி வாய்த்த நல் அமுது!
கனியைப் பிழிந்திட்ட சாறு எங்கள் கதியில்
உயர்ந்திட்ட யாம் பெற்ற பேறு!
தனிமைச் சுவையுள்ள சொல்லை எங்கள்
தமிழினும் வேறெங்கும் யான் கண்டதில்லை!

–புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

நூல் நயம்

# கொங்கு நாட்டு மகளிர்

## செ.இராசு

## அணிந்துரை

“கொங்கு நாட்டு மகளிர்” பற்றி புலவர் செ. இராசு அவர்கள் எழுதி இருக்கும் வெளியீடு பெண்ணியம் போற்றும் தமிழர் பண்பாட்டினை மேம்படுத்தும் ஒரு ஆவணம். கொங்கு மண்டல வரலாற்றில் குறிப்பாக கொங்கு வேளாளர் வரலாற்றில் கவுண்டர்களுக்கு இணையாக கவுண்டச்சி களுக்கும் சிறந்த பங்கு உண்டு என்பதை இந்த நாடறியும். இன்றும் கூட பல நூறு கொங்கு மகளிர் கல்வி, தொழில், மேலாண்மை, கலை இவற்றிற்கெல்லாம் மேலாக குடும்ப மேலாண்மை ஆகிய துறைகளில் முத்திரை பதித்து வருகின்றனர். தமிழ்நாட்டில் கொங்கு மண்டலம் வளர்ச்சியுற்ற பகுதியாக விளங்குவதற்கு முக்கிய உந்து சக்தியாக இருப்பவர்கள் இந்த கொங்கு மகளிர்களே.

இன்றைய கொங்கு மகளிர் எழுச்சிக்கு வித்திட்ட, அடித்தளம் அமைத்துக் கொடுத்த கொங்கு குல மகளிர் பலரை இந்த நூல் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

தகப்பன் பேச்சைக் கேட்காததால் ஒரு மாட்டையும், சொம்பு ஒன்றையும் கொடுத்து தன் வெள்ளந்தியான கணவன் குன்றுடையாக் கவுண்டனோடு விரட்டியடிக்கப்பட்ட தாமரை நாச்சி, தன் வீரத்தாலும், விவேகத்தாலும் யானை கட்டிப் போரடிக்கும் சிற்றரசாக மாற்றிய பெருமை பொன்னர் சங்கர் வரலாற்றில் நாமறிந்த ஒன்று. கொங்கு குல மகளிரின் எழுச்சிக்கு இவரே அடித்தளம் என்று கூறலாம்.

இந்த அடித்தளத்திற்கு மேலும் வலுவூட்டியவர்கள் நடுநிலை மாறாது நீதிப் பரிபாலனம் செய்த பெரிய கவுண்டச்சி தெய்வானையம்மாள், பழையகோட்டை மரபில் வந்த சிவகாமி, முத்தாத்தாள், வள்ளியாத்தாள், வஞ்சியாத்தாள் ஆகியோர் எனக் கூறுவது சாலப் பொருந்தும்.

மேலும் தாயன்போடும், கருணையோடும் தமிழ்ப்புலவர்களைக் காத்தருளிய பூந்துறைத்



தெய்வானையும், ஈஞ்சம்பள்ளி பச்சையம் மாளும், தன் தங்கத் தாலியையே தமிழ்ப் புலவருக்கு கழட்டிக் கொடுத்திட்ட சிங்கநல் சம்பந்த சர்க்கரைதேவியும் கொங்கு மண்ணின் தான தர்மங்களுக்கு வழிகாட்டியாக விளங்கியவர்கள்.

கொங்கு மண் வீரம் நிறைந்தது என்பதற்கு கொங்கு குலக் கண்ணகி என்று போற்றப்பட்ட வெள்ளையம்மாள், சகோதர பாசத்திற்கு பொன்னர் சங்கரின் அருமைத் தங்கை நல்லதங்காள் என்றழைக்கப்பட்ட அருக்காணித் தங்கம், வைணவம் போற்றிய கொங்குப் பிராட்டியார், ஈடு இணையில்லா திருச்செங் கோட்டுக் குறவஞ்சி இயற்றிய இரட்டைப் புலவர்கள் சின்னம்மையார் – பூங்கோதை என வரலாறு படைத்த கொங்குப் பெண்மணிகள் இந்த மண்ணின் அடையாளங்கள்.

மேலும் கொடையிற் சிறந்த பொங்கலூர் புகழ்மிகு கொங்கு மகளிர், பத்தினித் தேவதை மோகனூர் தேனாயி, ‘பெருங்கதை’ இயற்றக் காரணியாக இருந்த விசயமங்கலம் கொங்கு மகள், ஏழூர் நாட்டில் வேளாண்மை செழிக்க ஏரி அமைத்த கற்பூர ஆயி, செண்பக ஆயி, மணிமுத்தாற்றில் தடுப்பணை கட்டி பருத்திப் பள்ளிக்கு நீராதாரம் அளித்த அமிர்தவல்லி, ஆதரவற்றவர்களுக்கு இரக்கம் காட்டி எடுத்து வளர்த்து ஆளாக்கிய உமையாயி என அன்பு பாராட்டி, செயல்படுத்தி நேசம் வளர்த்த கொங்கு மங்கையரின் வரலாற்றுப் பதிவுகள்

இந்த மண்ணின் மகளிரின் பன்முகத் தன்மையை பாருக்கு உரைக்கும்.

ஏரி காத்த வேட்டுவச் சிறுமி, 9ஆம் நூற்றாண்டிலேயே அறுவைச் சிகிச்சை மூலம் பிரசவம் பார்த்த மருத்துவச்சி மங்கலை, கோயில் திருப்பணி யாற்றிய வேட்டுவ குலப் பெண்டிர் வீரி மற்றும் பாண்டாண்டி, சிவபெருமானை மணந்த அப்பிபாளையம் வடிவாம்பாள், கவரிமான் அனைய கைக்கோளப் பெண்மணி குப்பநாச்சி, குலாலர் குலத்தில் பிறந்து தன் அறிவுத் திறனாலும், தெய்வ பக்தியாலும் தன் இனத்துக்கு வரி விலக்குப் பெற்றுத் தந்த மீனாட்சி, கண்டராதித்த சோழனின் பட்டத்தரசி கொல்லி மழவரையன் மகள் செம்பியன் மாதேவி, இன்னும் பல பெயர் தெரியாத கொங்கு மகளிர் பற்றிய வரலாற்றுப் பதிவுகளை தக்க ஆவணங்களோடு வெளிக் கொணர்ந் துள்ள நூலாசிரியர் புலவர் செ. இராசு அவர்கள் பாராட்டுக்குரியவர்.

ஈரோடு சக்தி மசாலா நிறுவனங்களின் உரிமையாளர்கள் முனைவர் பி.சி.துரைசாமி, முனைவர் சாந்தி துரைசாமி ஆகியோரின் சக்திதேவி அறக்கட்டளை உதவியால் இந்நூல் வெளியிடப்படுகிறது. அவர்கட்கு எங்கள் மனமார்ந்த நன்றி உரியதாகுக.

கொங்கு நாட்டைப் பற்றி இந்த உலகம் அறியாத பல தகவல்களை கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலுமிருந்து தேடி எடுத்துத் தந்த பெருமை புலவர் இராசு அவர்களையே சாரும். இந்த மாபெரும் வேள்வியில் தன் வாழ் நாளையே அர்ப்பணித்து தொல்லியல் பணியாற்றி வரும் புலவர் இராசு அவர்களின் அரும் பணியில் சக்தி மசாலா நிறுவனமும் ஒரு சிறு பங்கேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

புலவர் இராசு அவர்கள் மேலும் பல ஆண்டுகள் இந்த அறப்பணியினை மேற்கொண்டு நலமுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

வாழ்த்தி மகிழும்,

முனைவர் பி.சி. துரைசாமி
முனைவர் சாந்தி துரைசாமி
சக்தி மசாலா நிறுவனங்கள்
ஈரோடு. 28.08.2015




| | |
|---|---|
| நூலின் பெயர் | கொங்கு நாட்டு மகளிர் |
| நூல் பொருள் | பெண்ணியம் |
| ஆசிரியர் | புலவர் செ. இராசு |
| மொழி | தமிழ் |
| நூல் உரிமை | ஆசிரியர்க்கு |
| பதிப்பு ஆண்டு | 2015 |
| நூலின் அளவு | 14 செ.மீ. X 21 செ.மீ. |
| பக்கங்கள் | 140 |
| அச்சு எழுத்து | 11 புள்ளி |
| விலை | ரூ.80/- |
| நூல் கிடைக்குமிடம் | கொங்கு ஆய்வு மையம், 58/2 பாலக்காட்டுத் தோட்டம் புதிய ஆசிரியர் குடியிருப்பு வழி ஈரோடு 638 011. போன்: 0424 226266 செல்: 9500938384 |
| நூல்&அட்டை வடிவமைப்பு | வாழ்க வளமுடன் ஆப்செட் பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் 29 நாச்சியப்பா வீதி II, ஈரோடு 638 001. போன்: 0424-2258511, 2258522 |



# சங்ககிரிக் கோட்டையின் மர்மம்

எழுதியவர்: பெ.தூரன்

## 5 திப்புசுல்தான் கோட்டை!

திப்புசுல்தான் கோட்டை என்பது திப்புவின் காலத்தில் கட்டியது. கோட்டையின் மதில் சுவர்களை இன்றும் போய்ப் பார்க்கலாம். அந்த மலையில் எந்தெந்த இடத்தில் பகைவர்கள் சுலபமாக ஏற முடியுமோ அங்கெல்லாம் பெரிய பெரிய மதில் சுவர்களை திப்புசுல்தான் கட்டி வைத்திருந்தான்.

பெரிய பெரிய கல்லுகளையெல்லாம் ஒழுங்காக அடுக்கி வைத்து அந்தக் கோட்டைச் சுவர்களைக் கட்டியதே ஓர் ஆச்சரியமாக இருக்கும். மேலே பீரங்கி வைத்துச் சுடும் படியான கொத்தளங்களும் உண்டு. ஆரஞ்சுப் பழம் அளவில் உள்ள பீரங்கிக் குண்டுகளை இன்றுகூட அங்கே காணலாம். மேலே தானியக் கிடங்குகளும் பகைவர்களை அடைத்து வைக்கும் இருட்டறைகளும் இருக்கின்றன. உச்சி வரையிலும் போவதற்கு வேண்டியவாறு அங்கங்கே படிகள் இருக்கின்றன.

மலை ஏறும்போது பாதி வழியில் ஒரு பெரிய குகை உண்டு. அதற்குள் யாருமே போகப் பயப்படுவார்கள். உள்ளே ஒரே இருட்டாக இருப்பதோடு பெரிய பெரிய கருவண்டுகள் இருக்குமாம். அவை கொட்டினால் உயிருக்கே ஆபத்தாம். அந்தக் குகை எங்கு போய் முடிகின்றது என்பதை யாரும் இதுவரை ஆராய்ந்து பார்க்கவில்லை.

ஆனால் அது வெகு தூரம் செல்லுகின்றதாம். பகைவர்கள் கோட்டையைத் தாக்கும் போது அவர்கள் வெற்றிபெற்று விடுவார்கள் என்று தோன்றினால் திப்புசுல்தானோ அல்லது அவனுடைய முக்கியமான தளபதிகளோ அந்தக் குகை வழியாக வெளியே தப்பிச் சென்று விடுவார்களாம். அந்தக் குகைக்குள்ளேதான் திப்புசுல்தான் ஏராளமான தங்கக் காசுகளையும் நகைகளையும் மறைத்து வைத்திருப்பதாக எல்லாரும் பேசிக் கொள்வார்கள். அந்தப் பக்கத்தில் யாராவது எதிர்த்து வந்தால் அவர்களோடு போர் செய்ய வீரர்களைத் திரட்டப் பணம் வேண்டுமல்லவா?

அதற்காக சுல்தான் முன் ஜாக்கிரதையாக அங்கே வைத்திருக்கிறானாம்.. ஆனால் திப்புசுல்தான் மைசூரிலிருக்கும் ஸ்ரீரங்க பட்டணத்திலே ஆங்கிலேயர்களோடு சண்டை

யிட்டு அதிலே இறந்து போன பிறகு இந்தக் கோட்டைக்கு இருந்த பெருமை யெல்லாம் போய் விட்டது. அவன் மறைத்து வைத்திருந்த புதையலைக் கண்டுபிடிக்க எத்தனையோபேர் முயற்சி செய்தும் யாருக்கும் அது கிடைக்க வில்லை.

இந்த விவரங்களையெல்லாம் ஒன்று விடாமல் தங்கமணி தன் நாட்குறிப்பில் எழுதி வைத்துக்கொண்டான். இவற்றைச் சேகரிக்கப் பலபேரிடமிருந்து அவன் கேட்கும் போது ஏதோ துப்பறியும் நிபுணனைப் போல ஜின்கா பக்கத்திலிருந்து கவனமாகக் கேட்கும். தங்கமணியின் முகத்தையும் அவனோடு பேசியவர்களுடைய முகத்தையும் மாறிமாறி அது உற்றுப் பார்த்துக்கொண்டே இருந்தது. அப்படி அது பார்ப்பதைத் தங்கமணி மனத்திற்குள்ளாகவே நன்கு ரசித்துக் கொண்டிருந்தான். ஆனால் அந்த வண்டிக்காரனும் எப்படியாவது கூடவே இருந்து இவற்றை யெல்லாம் கேட்பதைத்தான் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனுக்கு இதில் ஏன் இவ்வளவு அக்கறை? ஒரு சமயம் கிராமப்புற மக்கள் இப்படித்தான் இருப்பார்களோ?

"வண்டிக்காரா, நீ போய் உன் வேலையைக் கவனி" என்று தங்கமணி ஒரு சமயம் சொன்னான்.

"எனக்கு இன்றைக்கு வேலையில்லை – எனக்கும் கதை கேட்பதற்கு ஆசையாக இருக்கிறது" என்று அந்த வண்டிக்காரன்



பணிவோடும் கெஞ்சுவது போலவும் பதில் அளித்தான்.

"ஏன், நீ இந்த ஊருக்குப் புதிதா? இந்த ஊர்க்காரனாக இருந்தால் முன்பே இந்த விவரமெல்லாம் தெரிந்திருக்குமே?" என்று தங்கமணி திடீரென்று கேட்டான்.

வண்டிக்காரன் பதில் சொல்வதற்கு முன்னால் யாரோ ஒருவன் "ஆமாம், அவன் புதியவன்தான். இந்தப் பக்கத்து ஆளே இல்லை. கொஞ்ச நாளுக்கு முன்புதான் இங்கு வேலைக்கு வந்திருக்கின்றான். கதை கேட்பதிலே அவனுக்கு ரொம்ப ஆசை. எல்லாருக்கும் அப்படித்தான்" என்று தெரிவித்தான்.

# 6 கலந்துரையாடல்!



"மலைமேல் ஏறுவதற்கு முன்னால் சங்ககிரியைச் சுற்றி ஆராய்வது நல்லது" என்று தங்கமணி ஒரு நாள் இரவு மற்றவர்களிடம் சொன்னான். "ஏன்? குகையின் ரகசியப் பாதையைப் பற்றி முதலில் தெரிய வேணுமோ?" என்று கேட்டான் சுந்தரம்.

"எனக்கென்னவோ அப்படி ஒரு ரகசியப் பாதை இருக்குமென்றே தோன்றவில்லை. இருந்தாலும் சுற்றிப்பார்ப்பது நல்லது" என்றான் தங்கமணி.

"சரி, ஷெர்லக் ஹோம்ஸ் வார்த்தைக்கு

அப்பீல் இல்லை. நீ பிடித்தால் ஜின்கா பிடிதானே” என்றான் சுந்தரம்.

“என்னடா, குரங்குப் பிடி என்றா சொல்கிறாய்?” என்று கோபித்துக் கொண்டாள் கண்ணகி.

“அம்மா, கண்ணகி உனக்குக் கோபம் வந்தால் உலகமே தீப்பட்டு அழிந்து போகுமே – கொஞ்சம் கோபத்தைத் தணித்துக் கொள்” என்று கூறி நகைத்தான் சுந்தரம்.

இவர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டு ரசித்துக் கொண்டே கண்ணுப்பாட்டி அவர்களிடம் வந்தாள்.

“நாளைக்கு கிரிவலம் வரப் போகிறோம்” என்று முந்திக் கொண்டான் சுந்தரம்.

“அப்படியா? சங்ககிரி மலையைச் சுற்றி வருவதென்றால் ரொம்ப தூரம் நடக்க வேண்டுமே – வழியும் சரியாக இராது வேண்டுமானால் காட்டு மாரியம்மன் கோயில்வரை போய் வரலாம்” என்றாள் பாட்டி.

“காட்டு மாரியம்மனா? அங்கே ஏதாவது விசேஷம் உண்டா?” என்று ஆவலோடு கேட்டான் தங்கமணி.

“அந்தக் கோயிலைப் பற்றி என்ன வெல்லாமோ சொல்லுவார்கள். அதற்குள்ளே ஒரு குகை



இருக்கிறதாம். அந்தக் குகைக்கும் சங்ககிரி மலைமேலுள்ள குகைக்கும் வழி இருக்கிறதாம். ஆனால் இதை யெல்லாம் யாரும் பார்த்ததில்லை” என்றாள் பாட்டி. உடனே தங்கமணிக்கு ஆர்வம் அதிகமாகிவிட்டது. “கண்ணுப்பாட்டி, நாளைக்கே அந்தக் கோயிலைப் பார்க்கவேணும்” என்று தங்கமணி உற்சாகத்தோடு சொன்னான்.

“ஆமாம் பாட்டி நாங்கள் மூன்று பேரும் போகவேணும்” என்று கூவினாள் கண்ணகி.

“ஜின்காவை மறந்துவிட்டாயா? அது இல்லாமல் உன் அண்ணன் அசையமாட்டானே?” என்றான் சுந்தரம்.

“சரிதாண்டா, கோமாளி, அண்ணன் வந்தால்...” என்று அவள் முடிப்பதற்கு முன்பே “தம்பியும் வரும்” என்று நகைத்தான் சுந்தரம்.

## சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

### விளையாட்டு விழா 2025

நாள் : ஜூலை 20, ஞாயிற்றுக்கிழமை

இடம் : சவீதா பல் மருத்துவக் கல்லூரி வளாகம், பூந்தமல்லி, சென்னை

நேரம் : காலை 10:30 மணி முதல் மாலை 5.00 மணி வரை



### குடும்ப விழா 2025

நாள் : ஜூலை 27, 2025 ஞாயிற்றுக்கிழமை

இடம் : சவீதா பல் மருத்துவக் கல்லூரி வளாகம், பூந்தமல்லி சென்னை

நேரம் : காலை 9.00 மணி முதல் மதியம் 1:00 மணி வரை

சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கிப் பாராட்டி மகிழும் இவ்விழாவில் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.



கதை



# கவரிமான் அனைய குப்பநாச்சி

கைக்கோளர், செங்குந்தர், முதலியார் என்று அழைக்கப் பெறும் நெசவுத் தொழிலைக் கைக் கொண்ட பெருமக்கள் தமிழகம் எங்கும் பரவி வாழும் சிறப்புமிக்க ஓர் இனமாகும். முருகப் பெருமான் அவதரித்த பின் காமாட்சியம்மன் சிலம்பில் தோன்றிய நவ வீரர்கள் வழி வந்த வர்கள் அவர்கள். அசுரர்களையழித்துத் தேவர் சிறை மீட்டபின் என்ன தொழில் செய்யலாம் என இறைவனைக் கேட்க அவர் “மக்கள் மானம் காக்கும் நெசவை மேற்கொள்ளுக” என்றார் என்பர்.

இதனை வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் சதகம்,

“கயிலாய கிரியதனில் முப்பத்து முக்கோடி
கடவுளர் பணிந்துபோற்ற
கந்தர்உற் பத்தியாகிப் பின்னுநவ வீரர்கள்
காமாட்சி உமைசிலம்பில்
செயமொடு பிறந்து அசுரர் வங்கிசம் அழித்துநல்
தேவர்சிறை மீட்டு நன்றாய்
சீவனம் செய்வதற்கு உரியதொழில் யாதெனச்
செய்வதும் நெய்தொழில்என
வயனமொடு உகந்துமா னிடவர்க்கு அபிமான
மதுகாத்து மகிமைபெறவே
வந்தசெங் குந்தமா முதலியார்கள் இவர்என
வகுத்தனர்கள் ஆதி நூலோர்”

என்று கூறுகிறது.

கொங்கு நாட்டு முதலியார்கள் வேளாளர்கள் போல் சடங்கு செய்து “கொங்குமுதலியார்” எனப் பெயர் பெற்றனர். இதனை

“ஆதிகுலம் செங்குந்தர் அதனில்வரு
கொங்கனுக்கு
சாதிகுலம் கல்யாணம் தனதுமுறைப் படியாக
நீதியுடன் எந்நாளும் நிலைத்திருக்க
வேண்டும்என
ஓதிவைத்தான் பூந்துறை நாட்டு உலகுடைய
உத்தமனே”

என்ற தனிப்பாடல் விளக்குகிறது.

வேளாளர் சடங்குகள் சிலவற்றை செங்குந்த முதலியார்கட்கு அளித்தவர் வெள்ளோடு கிராமத்தைச் சேர்ந்த உலகபுரம் கொங்கு வேளாளர்களில் சாத்தந்தை உலகுடையார் எனத் தனிப்பாடல் கூறுகிறது.

வேந்தர்களிடம் “கைக்கோளப்படை” என விளங்கி, ஆலயங்களைக் காத்து “பொற் கோயில் கைக்கோளர்” என்று பெயர் பெற்று, நெசவுத் தொழிலிலும் ஈடுபட்டுள்ளவர்கள். அவர்களைக் கொங்கு வேளாளர் ஆவணம் “கைக்கோளனார்” எனச் சிறப்புடன் குறிக்கிறது.

பொன்னர் – சங்கர் ஆகிய அண்ணன்மார் வளநாட்டை நீதியுடன் ஆட்சி செய்யும்போது பல்வேறு இடையூறுகள் செய்த வேட்டுவர் தலைவன் தலையூர்க்காளி ஒருமுறை வளநாடு வந்து திருக்காம் புலியூர், செக்கநத்தம், பழைய செயங்கொண்ட சோழபுரம், கருப்பத்தூர், மணத்தட்டை, குளித்தலைப் பகுதியில் கொள்ளையிட்டதுடன் பச்சணா முதலியார் மகள் குப்பநாச்சி என்ற குப்பாயியை சிறை எடுத்துச் சென்றனர். “வாடா மரிக்கொழுந்து” “மலராத மல்லி மொக்கு” என வருணிக்கப்பட்ட குப்பாயியை தூங்கும்போது சிறையெடுத்துச் சென்றனர்.

அண்ணன்மார் ஆட்சியில் செங்குந்தர், செட்டியார் உட்பட அனைத்துச் சமூகத்தினரும் கவலை எதுவும் இன்றிப் பாதுகாப்புடன் வாழ்ந்தனர். சிறை சென்ற குப்பாயி விழித்தவுடன் தன் நிலையை எண்ணிப் புலம்பினாள். அண்ணன்மார் காப்பாற்றுவர் எனக் கவலை யின்றி இருந்த அவள் அவர்களைத் தம் அண்ணனாகவே பாவித் திருந்தாள். குப்பாயி மனம் கலங்கி,

"சிங்கம் இருக்குதென்று திகிலில்லை
என்றிருந்தேன்
சிங்கமே எங்கொளித்தாய் திகில்வந்து
சேர்ந்ததிப்போ
ஆனை இருக்குதென்று சின்னண்ணா
அச்சமில்லை என்றிருந்தேன்
ஆனையே எங்கொளித்தாய் இப்போ அச்சம்
வந்து நேர்ந்த தண்ணா"

என்று புலம்பினாள். இனி தலையூர்க் காளி வீட்டில் தண்ணீர் சுமந்து சாணி தட்ட வேண்டி யிருக்கும் என அஞ்சினாள். பெருங்கூக்குரல் இட்டு அழுதாள்.

அத்தை மகன் மைத்துனர் எதிரிலாப்



பெருமாளோடு வேட் டைக்கு வந்த சங்கருக்குக் குப்பாயியின் புலம்பல் காதில் கேட்டது. உயர்ந்த குன்று மேலேறிப் பார்க்கையில் தலையூர்க்காளி கொள்ளை கொண்டு போவதும், பச்சணா முதலியார் மகள் குப்பாயி சிறைபிடிக்கப் பட்டதையும் அறிந்தனர்.

அவர்களை அழித்து குப்பாயியைச் சிறை மீட்க அண்ணன் பொன்னரின் அனுமதி வேண்டும் என்பதால் மைத்துனர்,

"வெள்ளாளன் பெண்ணை இந்த
வேட்டுவனும் சிறையெடுத்தால்
சிறையெடுத்த வேட்டுவனைச்
சீவுவேன் அவன் தலையை"

என்று கூறிய சங்கரை அண்ணனிடம் அனுப்புகிறார்.

சங்கர் பொன்னரிடம் வந்து வேடுபடையை அழித்துக் குப்பாயி யைச் சிறைமீட்க அனுமதி கேட்டார். அண்ணன் அனுமதி தரவில்லை. சங்கர் மீண்டும் சிறை மீட்க வேண்டும் என்று சொல்ல இருவருக்கும் வாக்குவாதம் நடைபெற்றது. அப்போது தங்கை அருக்காணித் தங்கம் வந்து சங்கர் சொல்வதை ஆதரித்து,

"ஒக்கப் பிறக்கணுமா ஒரு முலைப்பால்
உங்கணுமா?
கூடப் பிறந்து அண்ணா கூட்டுப்பால்
உங்கணுமா?
ஒக்கப் பிறந்து அண்ணா உடன்பிறப்பு
அல்லாவிடினும்
உதிரப் பிறப்பு அண்ணா உடன்பிறப்பு
ஒண்ணல்லவா?
பெண்சிறை எடுத்துப்போக உன்மனது
பொறுக்குதா?"

என்று என்னைச் சிறையெடுத்தால் உன் மனம் பொறுக்குமா? நான் வேறு குப்பாயி வேறா? என்று கூறவே சங்கருக்கு அனுமதி கிடைக்கிறது.

குப்பாயி சிறை மீட்கப்பட்டு அண்ணன்மார் அரண்மனை மிலிருந்தாள். அண்ணன்மார்.

"முதலியார் சனங்களையும் முழுசாகக் கூட்டி வந்து
குப்பநாச்சி யம்மாளைக் கூட்டிப் போங்கள்"

என்று கூறினர். முதலியார்கள் "ஊரை விட்டுப் போன சிறையை எப்படி ஏற்றுக் கொள்வது" எனக் குப்பநாச்சியை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். அண்ணன்மார் வற்புறுத்தவே நீங்கள் சரிசமமாகக் குப்பநாச்சியுடன் உணவு உட்கொண்டால் அவளை ஏற்றுக் கொள்கிறோம் என்றனர்.

தாதிமார்கள் குப்பநாச்சியை நீராட்டித் தலைகோதி முடித்து பட்டுப் புடவை கொடுத்து ஆபரணங்கள் பல அணிவித்து அண்ணன்மார் தங்கை அருக்காணியுடன் உடன் உண்ணச் செய்தனர். தங்கை அருக்காணி "இந்த உலகில் நான் இருக்கும் மட்டும் உன்னைச் சமமாகப் பாவிப்பேன்" என்று கூறி விடை கொடுத்தாள்.

தன் பெற்றோர் உற்றார் உறவினரோடு ஊர் திரும்பிச் செல்லுகையில் மனம் புண்ணாகி மிகக் கவலை கொண்டாள் குப்பநாச்சி. ஏங்கி மனம் கலங்கினாள்.

"பெண்ணாகப் பிறந்தவளுக்கு – இத்தனை
பிழைகள் வந்து நேரணுமா?
ஊழியுள்ள காலம்எல்லாம் – ஒரு
ஏச்சுதலை ஆச்சுதிப்போ
இருந்து பேச்சுக் கேட்பதற்கு – நான்
இறந்து போனால் மோட்சமுண்டு"

என மனதில் எண்ணி இறைவனை வணங்கி இனி உயிருடன் இருக்கலாகாது எனத் தன் நாக்கைப் பிடித்து இழுத்துத் தற்கொலை செய்து கொண்டாள். "தெய்வமே என்னை வரவழைத்துக் கொள்ளும் சாமி" என்பதே குப்பநாச்சி கூறிய கடைசி வார்த்தை ஆகும்.

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்" போல "மானம் இழந்தபின் வாழாமை முன்னினிதே" என எண்ணி மரணமடைந்த குப்பநாச்சியை எண்ணும்போது நம் மனம் திடுக்கிடுகிறது.

கொங்கு வேளாளர் பொருட்டுப் பகைவரை எதிர்த்துப் போர் செய்த நாவிதன் குமரன் இறந்துவிடவே அவன் மனைவி சின்னம்மாள் 'நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகிறேன்" என்றாள். காங்கேய மன்றாடியாரும் காணியாளக் கவுண்டர்களும் "நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாக வேண்டியதென்ன பொட்டி மகளே" என்று தடுத்து ஆதரித்ததை காடையூர்ச் செப்பேடு கூறுகிறது. இன்றும் பேச்சு வழக்கில், "நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம்" என்று கூறுகிற வழக்கம் இருப்பதைக் காணுகிறோம்.

# நல்வாழ்த்துகள்



ஜப்பானிய தொராசிக் அறுவை சிகிச்சை சங்கம் (JATS), வரும் அக்டோபர் 23 முதல் 25 வரை ஜப்பானின் ஒசாகாவில் நடைபெறவிருக்கும் அதன் 78வது ஆண்டு அறிவியல் கூட்டத்தில், ஜெம் மருத்துவ மனைகளின் தலைவரும் நிறுவனருமான டாக்டர்.சி. பழனிவேலு அவர்களுக்கு வெளிநாட்டு கௌரவ உறுப்பினர் மற்றும் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படும் என்று அறிவித்துள்ளதைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

அட்டை சொல்லும் சேதி

# கூட்டுறவுத் தந்தை
# S.K.சென்னியப்ப கவுண்டர்

கூட்டுறவுத் தந்தை என்று அன்றைய கோவை மாவட்ட (கோவை, நீலகிரி, ஈரோடு, திருப்பூர் மாவட்டங்கள் இணைந்தது) மக்களால் நன்றியோடு அழைக்கப்படும் திரு.S.K.சென்னியப்ப கவுண்டர் அவர்கள் 1900 ஆம் ஆண்டு ஈரோட்டுக்கருகில் உள்ள சின்னியம்பாளையம் என்ற கிராமத்தில் பாங்கிக்காரர் என்றழைக்கப்பட்ட திரு.S.குமார சாமி கவுணடர் குடும்பத்தில் முதல் மகனாகப் பிறந்தார். வளமான குடும்பமென்பதாலும் முதல் குழந்தை என்பதாலும் செல்லமாக வளர்ந்த திரு.S.K.சென்னியப்ப கவுண்டர் 9ஆம் வகுப்புப் படிக்கும் போது செழிப்பின் காரணமாய்ப் படிப்பை விட்டார். இளைஞனாக வளர்ந்த பொழுது அவருக்குத் தமிழ் நாடெங்கும் நண்பர்கள் அமைந்தார்கள்.




இளமையிலேயே ஏழைகளுக்கும் இயலாதவர்க்கும் உதவும் மனம் பெற்றவர். ஒரு மிகுந்த வறியவனுக்கு ஒருமுறை தான் அணிந்திருந்த உடைகளையெல்லாம் கழற்றித் தந்துவிட்டு வந்து விட்டார். இளைஞனாக இருந்தபோது ஓரிரு நண்பர்களோடு எவர்க்கும் சொல்லாமல் வீட்டை விட்டுப் போய் ஆந்திரா, கல்கத்தா, பர்மா, பம்பாய், சீரடி முதலிய ஊர்களுக்குச் சென்று ஏறத்தாழ 6 மாதங்கள் நாட்டை வலம்வந்து மக்களையும், தேசத்தையும் நன்றாக அறிந்து கொண்டார்.

ஈரோடு அப்போது கொங்கு வேளாளர் தவிர மற்ற இனத்தவர் வாழும் ஒரு சிறு நகரமாக இருந்தது. தொழில், வணிகம் என்பது அவர்கள் கைகளிலேயே இருந்தது. ஊரில் உப்பு கூட யாரும் விற்கக்கூடாதென்று தடுக்கப்பட்டிருந்தனர். இதைக் கேள்விப்பட்ட இளமையும், தன்னம்பிக்கையும் கொண்ட சென்னியப்ப கவுண்டர் இந்த ஒருதலைப்பட்ச வியாபாரத்தை எதிர்த்து ஈரோட்டில் உப்பு மண்டி ஆரம்பித்தார். ஒவ்வொரு ஊர் சந்தையிலும் ஒரு பெரும் போராட்டம், அடிதடி என எல்லா எதிர்ப்புகளையும் மீறி ஈரோட்டில் ஒரு நிலையான உப்பு மண்டியை ஏற்படுத்தினார். கொங்கு வேளாளர் இளைஞர்கள் ஈரோட்டில் தொழில் தொடங்கும்படி தொடர்ந்து வலியுறுத்தினார். இதற்காகவே S.K.C. ஈரோட்டில் குடியேறினார்.

24 உறுப்பினர்களைக் கொண்ட அப்போதைய ஈரோடு நகர் மன்றத்தில் 5 உறுப்பினர்களின் ஆதரவோடு மும்முனைப் போட்டியில் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு 1947 முதல் 1952 வரை ஐந்தாண்டுகள் பணியாற்றி உள்ளார். ஆட்சியில் மைனாரிட்டியாக இருப்பினும் அவருடைய கடினமான நேர்மை, தைரியம் மற்றும் தன்னம்பிக்கையில் வெற்றிகரமான சேர்மனாகத் திகழ்ந்தார். அவருடைய காலத்தில ஈரோட்டில் ஏழைகள் பகுதியில் குடிநீர், சாலை வசதி, பள்ளிக்கூடங்கள், மருத்துவ வசதி என அனைத்து வாய்ப்பு வசதிகளை செய்து கொடுத்தார்.

சுற்றுப்புற கிராம மக்களுக்கு ஈரோடு நகராட்சியில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தினார். ஒரு கண்காட்சி, 10 நாட்கள் இசை, நாடக நடன விழாக்கள் எனப் பல நிகழ்ச்சிகளைப் பொது மக்களுக்காகவே நடத்தினார். ஈரோடு சிதம்பரனார் பூங்காவை விரிவுபடுத்தியும், குடிநீர் வசதிகளை அதிகப்படுத்தியும் பல நலத்திட்டங்களை நடத்தினார். பொது நலத்தின் பேரால் சுயநலத்தையே நாடச் செய்யும் இக்காலகட்டத்தில் அவரது சீரிய



பண்பு நலன்களை கண்டு மகிழ்ந்த பல அறிஞர்களும், மேதைகளும் அவரின் 71ஆம் ஆண்டு பிறந்த விழாவின் நினைவாக ஈரோட்டில் கூட்டுறவு வங்கி வளாகத்தில் சிலை அமைத்து சிறப்பித்தனர்.

கூட்டுறவுத் துறைக்கே தன் வாழ்வை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட S.K.C. அவர்கள் 33 ஆண்டுகட்கு மேலாக ஈரோட்டில் கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவராகவும், கோவை கூட்டுறவு அச்சுக் கூடத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். கூட்டுறவு அச்சுக் கூடத்தின் தலைவராகப் பணியாற்றிய கால கட்டத்தில் அவர் ஆற்றியுள்ள இணையற்ற பணிகள் இன்னும் போற்றப்படுகின்றன.

அவரிடம் எப்போதுமுள்ள கண்டிப்பு, நேர்மை, கடின உழைப்பு, துணிச்சல் இவை காரணமாக நீலகிரி மாவட்டம் உட்பட்ட கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவராக 25 ஆண்டு காலம் தொடர்ந்து பணி யாற்றினார். அக்காலத்தில் வங்கி 'A' வங்கியாக இருந்தது.

இவர் தலைவராக இருந்த காலத்தில் வங்கிப் பணம் ஒரு பைசாக்கூட அனாவசி யமாக செலவு செய்ய மாட்டார். 20 பேர் போர்டு மெம்பர்கள் கூட்டத்திற்கு வந்தால் 5 எடுப்புச் சாப்பாடு எடுத்து வந்து அனை வருக்கும் தருவார். கூட்டம் ஆரம்பித்து ஒரு மணி நேத்திற்குள் போர்டு மெம்பர் வராவிட்டால் மினிட் புத்தகத்தில் கையெழுத்திட அனுமதிக்க மாட்டார். ஒவ்வொரு போர்டு மெம்பருக்கும் கிடைக்க வேண்டிய படித்தொகையைக் கூட ஒரு மணி நேரம் தாழ்ந்து வந்தால் தர மாட்டார். கிளை வங்கித் தலைவர்கள் பினாமியாகக் கடன் வாங்கினாலோ, கடனை செலுத்தாமல் இருந்தாலோ அந்தந்த வங்கிகட்கு நேரடியாகச் சென்று தலைவர்களைக் கடுமையாகக் கடிந்து கொள்வதோடு பணத்தையும் வசூல் செய்துவிட்டுத்தான் வருவார். ஒரு தாய் குழந்தை மீது காட்டுகிற கவனத்துடன் கோவை மாவட்டக் கூட்டுறவு வங்கியைக் கண்ணை இமை காப்பது போல் காத்து வந்தார்.

ஒவ்வொரு கிளை வங்கியும் விநியோக்கிற கடன்கள், கடன் பெறுவோர், தராதரம், கடன் வசூலிப்பு இவற்றை தினசரி கவனிப்பார். இவருடைய இந்தக் கண்டிப்பான நேர்மையான உழைப்பால் இவரினும் வயது முதிர்ந்தவரும் இவரிடம் மரியாதை செலுத்தினர். இவரை அனைவரும் S.K.C. என்று சுருக்கமாக அழைப்பார்கள். கண்டிப்பும், அஞ்சாமையுமுள்ள இவரிடத்தில் ஏழைகளைக் கண்டால் இரங்கும் குணம் ஏராளமாக இருந்தது.

வங்கியில் அளிக்கப்படும் பதவிகட்கு எவ்வளவு பெரிய பணக்காரரும், அதிகாரத்தில் உள்ளவர்கள் பரிந்துரை செய்தாலும், படித்த வசதியற்ற ஏழைகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத்தான் பதவிகளை அளிப்பார். ஏன் பணக்காரர்களுக்கு தருவதில்லை என்று கேட்டால் அவன் வசதியானவன், எப்படியும் பிழைத்துக் கொள்வான் என்பார். இவரால் பதவி பெற்ற ஆயிரக்கணக்கான கிராம மக்கள் இன்றும் நினைவு கூர்ந்து வணங்குகிறார்கள். இவருடைய நேர்மைக்கு உதாரணமாக பல நிகழ்ச்சிகளில் ஒன்றை சொல்லலாம்.

மாவட்ட வங்கித் தலைவருக்கென்று ஒரு காரும், ஒரு ஓட்டுநரும் உண்டு. அந்தக்காரை வேறு யாரும் உபயோகிக்க அனுமதிக்க மாட்டார். அவரது மனைவி, மக்கள் கூடப்பக்கத்து கிராமத்திற்கு செல்வதாயினும் இரட்டை மாட்டு வண்டியில்தான் செல்ல வேண்டும்.

யாராவது கேட்டால் இந்தக் கார் வங்கித் தலைவர் உபயோகத்திற்கெனத் தரப்பட்டது

என்றும், சென்னியப்ப கவுண்டன் தகுதிக்கு மாட்டு வண்டிதான் சரி என்றும் சொல்வார். ஒரு நாள் சென்னியப்ப கவுண்டர் வெளியூர் சென்றிருந்த போது அவரது மனைவி ஈரோட்டில் அவரது மகள் வழிப்பேரன் பிறந்ததை கேள்விப்பட்டு ஓட்டுநரை அவசரமாகக் காரை எடுக்கச் சொல்லி ஈரோடு வந்து கொண்டிருந்தார். அவரது துரதிர்ஷ்டம் சென்னியப்ப கவுண்டர் பாதி வழியில் திரும்பி வந்து விட்டார். தன் மனைவி வங்கிக் காரில் வருவதைக் கண்டு வெகுண்டு பாதி வழியில் அவரது மனைவியை இறக்கி விட்டு விட்டு காரை தோட்டத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு திரும்ப எடுத்து சென்று விட்டார். பாவம் திருமதி அவரது மனைவி சிரமப்பட்டு யாரோ ஒருவர் வந்த காரில் ஈரோடு வந்து சேர்ந்தார். நேர்மையும் கண்டிப்பும் என்பதில்



மனைவிக்குக் கூட சலுகையில்லை என்பதே S.K.C. அவர்களின் கொள்கை.

S.K.C.யின் விருந்தோம்பல் பண்பு யாவரும் அறிந்தது. அவரது இல்லத்திற்கு சென்றுவிட்டு சாப்பிடாமல் யாரும் திரும்ப இயலாது. திடீரென ஐந்தாறு பேரோடு வருவார். அலே! எல்லோருக்கும் இலையைப் போடு என்பார். அனைவருக்கும் உடனே இலையைப் போட்டு பரிமாறும் கலை திருமதி.S.K.C. அவர்களுக்கு மட்டுமே தெரியும்.

ஒரு முறை, முன்னாள் உள்துறை செயலாளர் திரு.வரதராஜுலு அவர்கள் காங்கேயம் கூட்டுறவு வங்கித் தலைவராக இருந்தார். தோட்டத்தில் S.K.C. அவர்களைப் பார்த்து மில்லுக்கு கடனாக பணம் கேட்க வந்தார். தோட்டத்தில் ஓலைக் கொட்டகையில் சட்டை கூட இன்றி ஒரு பெரியவர் அமர்ந்திருந்தார். வங்கிச் செயலாளர் பழனிச்சாமி ஓடி வந்து இவர்தான் சேர்மன் என்றதும் அவருக்கு அதிர்ச்சி. அடுத்து வரும் அதிர்ச்சிகளைப் பற்றி அவர் அப்போது அறியவில்லை.

வா! வா! என்றழைத்துத் தன் பக்கத்தில் உட்கார வைத்தார். இவர்தான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் கிருஷ்ணசாமி நாயுடுவின் மகன் என்று சொன்னதும் 'அட! இவன் நம்ம வீட்டுப் பையன்' எனச் சொன்னதோடு, 'பையன் சூட்டிப்பாக உள்ளான். வாங்கிய கடனை திருப்பிச் செலுத்துவான்' என்று சொல்லி 5 லட்சத்திற்கான காசோலையைத் தந்தார். டேய்! சேஷா என்றழைத்துக் கோழியைப் பிடித்து உடனே சமையலுக்கு ஏற்பாடு செய்!' என்றார். வரதராஜுலு ஐயா! நான் போக வேண்டுமென மறுப்புச் சொன்ன போது செயலர் பழனிச்சாமியை அழைத்து செக்கைத் திரும்ப வாங்கிக் கொள்! பணமுமில்லை ஒன்றுமில்லை' என்றார்.

வரதராஜுலு உணவருந்தி விட்டுத்தான் சென்றார். இந்நிகழ்ச்சியை நினைவு கூருகையில் வரதராஜுலு, 'He was an unforgetable charecter in my life' என்று சொன்னார். இப்படி விருந்தோம்பலில் சிறந்து விளங்கினார்.

S.K.C.யின் அதிகாரத்தில் பயம் என்ற வார்த்தைக்கு இடமில்லை. யாருக்கும் எந்த சமயத்திலும் இவர் பயந்து நடந்த வரலாறே கிடையாது.

தன் வாரிசுகள் விடுமுறை முடிந்து செல்வதற்குள் இறந்து விடுவேன் என்று சொன்னது போலவே 1972-ஆம் ஆண்டு மே 27ல் S.K.C. இறைவனடி சேர்ந்தார். அவர் உயிர்தான் பிரிந்ததே தவிர அவர் புகழ் இன்றும் வாழ்ந்து கொண்டுதான் உள்ளது.

ஈரோட்டில் ஒரு சாலைக்கு S.K.C. சாலை என்று அவர் பெயரிடப்பட்டுள்ளது.

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்றார் வள்ளுவர். மொத்தத்தில் ஒரு நல்ல மனிதராகவும் தான் வாழ்ந்த காலத்திலேயே புகழின் உச்சியை தொட்டவர் ஒருவர் உண்டெனில் அவர்தான் திரு.S.K.சென்னியப்ப கவுண்டர் அவர்கள். அவருக்கு கொங்கு நாடு அறக்கட்டளை "காலிங்கராயன்" விருதினை அளித்து கௌரவித்தது.

# கூட்டுறவு பால்வளத்தந்தை

## திரு.S.K.பரமசிவன் EX. M.P

சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025

திரு.S.K.பரமசிவன் Ex. M.P. அவர்கள் 20.02.1919ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், சின்னியம்பாளையம் என்ற கிராமத்தில் திரு.குமாரசாமிக்கவுண்டர், திருமதி.குப்பாயம்மாள் தம்பதிக்கு 10வது குழந்தையாக பிறந்தார். தனது பள்ளிப்படிப்பை ஈரோட்டிலும், தனது உயர்கல்வியை சென்னை, மாநிலக் கல்லூாயில் பயின்றவர். இவர் தனது மாணவப்பருவத்தில் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுத்தி கொண்டு கோவை மாவட்ட மாணவர் காங்கிரஸ் தலைவராக இருந்தவர். மேலும் “வெள்ளையனே வெளியேறு” போராட்டத்தில் கலந்து கொண்டவர்.



இந்திய சுதந்திரத்திற்கு பின் 10 ஆண்டுகள் முத்துக்கவுண்டம் பாளையம் பஞ்சாயத்து தலைவராகப் பணியாற்றியவர். மேலும, 1962ஆம் ஆண்டு ஈரோடு பாராளுமன்ற தொகுதியின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது பதவிக்காலத்தில் ஏற்பட்ட சீனப்போரின் போது முன்னாள் பாரதப்பிரதமர் திரு. ஜவஹர்லால் நேரு அவர்களிடம் போர் நிதியாக தனது மனைவியின் ஆபரண நகையை வழங்கியவர்.

கூட்டுறவு இயக்கத்தின் மீது கொணட பற்றின் காரணமாக 1960ம் ஆண்டு ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தினை தமிழகத்திலுள்ள மஞ்சள் விவசாயிகள் விளைபொருளுக்கு உரிய விலை கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கில் தொடங்கி இச்சங்கத்தில் நிறுவனத்தலைவராக 1960-1976 வரை 16 ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றினார்.

மேலும் அய்யா அவர்கள் காலத்தில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்கு சத்தியமங்கலத்தில் 8.5 ஏக்கரும், தாராபுரம் அருகில் சங்கரண்டாம் பாளையத்தில் 9.1 ஏக்கரும், ஈரோடு SIDCO Unit ல் கால்நடை தீவனம் தொழிற்சாலைக்கு 10.0 ஏக்கரும் வாங்கப்பட்டது. மேலும் 2000ம் வருடம் அய்யா அவர்கள் முயற்சியால் புனரமைப்பு திட்டத்தின் கீழ் Dr. குரியன் அவர்களிடம் பேசி இந்தியாவில் முதன்முறையாக ஈரோடு பால் பண்ணைக்கு ரூ.9 கோடி மானியமாக பெற்று வந்ததனால் பால் உற்பத்தியாளர்கள் நலன் காக்கப்பட்டது.

இவரது காலத்தில் மஞ்சள் விவசாயிகளின் ஏல விற்பனை முறையில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்தினார். மஞ்சள் விற்பனை கமிஷன் தொகையை பாதியாக குறைத்து, விவசாயிகள் நலம் பெற வழிவகை செய்தார்.

மேலும் விவசாயிகள் தங்களின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும், விற்பனை தினம் அன்றே உடனடியாக விற்பனை தொகை பட்டுவாடா செய்ய வழிவகை செய்தார். இதன் மூலமாக மஞ்சள் விவசாயிகளின் ஏகோபத்த ஆதரவை பெற்று இச்சங்கம் நல்ல வளாச்சியை பெற்றுவருகிறது.

குறிப்பிடத்தக்க அம்சமாக இச்சங்கம் தொடங்கப்பட்ட நாள்முதல இலாபத்தில் இயங்கி வருகிறது. மேலும் விவசாயிகளுக்கு ஆண்டு தோறும் 14% பங்கு ஈவுத்தொகை வழங்கிவருகிறது.

மேலும் இச்சங்கத்திற்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட சங்கததிற்கு சொந்தமாக ஈரோட்டில் கருங்கல்பாளையம் என்ற இடத்தில் 2.5ஏக்கர் நிலம் மற்றும் திண்டல் என்ற இடத்தில் 2ஏக்கர் நிலம் கொள்முதல் செய்ய பெரும் முயற்சி எடுத்தவர்.

நிறுவனர் ஐயா அவர்களின் வழிகாட்டுதலின்படி இச்சங்கத்தில் மஞ்சள் விவசாயிகளின் விளைபொருட்களை மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி மங்களம் என்ற பெயரில் மஞ்சள்தூள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மங்களம் மஞ்சள்தூள் பொதுமக்களிடம் நல்ல வரவேற்பை பெற்று ஆண்டு தோறும் விற்பனை அளவு நல்ல வளர்ச்சியை பெற்று வருகிறது.

அய்யா திரு.S.K.பரமசிவன் அவர்கள், இந்திய பால் வளத்தந்தை எனப்போற்றப்படும் திரு.V.குரியன் அவர்களின் நெருங்கிய நண்பரா வார். இவரது முயற்சியால் குஜராத் ஆனந்த் பால் பண்ணையின் மாதிரியை ஈரோட்டில் கொண்டு



வந்தவர். தேசிய பால் வள வாரிய குழுத்தலைவர் டாக்டர் E.மாதவன் அவர்களுடன் இணைந்து ஈரோடு மாவட்டத்தில் பல பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை உருவாக்கி பின் ஈரோடு மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தை நிறுவி அதன் முதல் நிறுவன தலைவராக பணியாற்றியவர்.

இவர் ஒன்றியத்திற்காக ஈரோடு சித்தோட்டில் 65ஏக்கர் நிலத்தை விவசாயிகளிடம் கொள்முதல் செய்து கொடுத்தவர். மேலும் தேசிய பால்வள வாரியத்தின் (NDDB) பயிற்சி மையம் ஈரோட்டில் அமைய காரணமாக திகழ்ந்தவர். இவரது பெரும் முயற்சியில் ஆவின் நிறுவனத்தின் சார்பாக கால்நடை தீவன ஆலை ஈரோட்டில் தொடங்கப்பட்டது.

அய்யா திரு.S.K.பரமசிவன் அவர்கள் ஆச்சார்யா வினோபாவா அவர்களின் பூமிதான இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்தி கொண்டு நிலம் இல்லாத ஏழை மக்களுக்காக தனது நிலத்தை இலவசமாக வழங்கியவர்.

# அரூர் ஆர். முத்துக்கவுண்டர்

அரூர் ஆர். முத்துக்கவுண்டர் 22.09.1918-இல் இராமசாமி கவுண்டருக்கு மகனாகப் பிறந்தார். அரசியல் மற்றும் சமூகப் பணிகளில் ஆர்வமுடைய அவரது திருமணம், 1947-இல், தந்தை பெரியார் தலைமையில், பேரறிஞர் அண்ணா முன்னிலையில் நடைபெற்றது.

அவர்1962 முதல் 1967 வரைநாடாளுமன்ற உறுப்பினராகச் செயல்பட்டதும், பிறகு1967 முதல் 1971 வரை மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அவரது அரசியல் வாழ்க்கையின் உச்சம்.



விவசாயம் மற்றும் கூட்டுறவுத் துறைகளில் அவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. பாரத விவசாயிகள் சங்கத்துக்குத் தமிழ் மாநிலப்பிரிவின் தலைவராக பதவி வகித்தார் பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குத் தலைவராகவும், தமிழ்நாடு அரசு உயர்மட்ட விவசாயிகள் குழுவின் உறுப்பினராகவும் இருந்தார்.

இவர் கல்வித்துறையிலும் தனது பணிகளை விரிவுபடுத்தினார். அரூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியின் பெற்றோர்-ஆசிரியர் கழகத்திற்கும், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் பெற்றோர்-ஆசிரியர் கழகத்திற்கும் தலைவராக இருந்தார். மேலும், கோவை வேளாண்மைக் கல்லூரியின் பட்டப்படிப்பு மாணவர் தேர்வுக் குழுவிற்கு 1967-1968ஆம் ஆண்டில் தலைமை வகித்தார்.

தமிழ்நாடு மாநில பால் உற்பத்தியாளர் நலச்சங்கத்தில் துணைத் தலைவராக, பணியாற்றினார். 1973-இல் பாலக்கோடு சர்க்கரை ஆலைக்கு தலைவராகப் பொறுப்பேற்றார். 1975-இல் அரூர் பால் உற்பத்தியாளர் சங்கத்தை நிறுவி அதற்குத் தலைவராக செயல்பட்டார்.

1986-ஆம் ஆண்டில், பால் விலை உயர்வு குறித்து கே.ஏ. செங்கோட்டுவேல் மற்றும் பரமசிவகவுண்டருடன் இணைந்து, தமிழக ஆளுநரை நேரில் சந்தித்தார். அதே ஆண்டில், 27.01.1986 அன்று செங்கல்பட்டு நகரில் நடைபெற்ற மாநில கரும்பு விவசாயிகள் சங்க மாநாட்டில் பங்கேற்றார்.

அரூர் மண்ணின் வளர்ச்சி மற்றும் தமிழ்நாட்டின் கூட்டுறவுத் துறை முன்னேற்றத்திற்காகக் கடுமையாக உழைத்த அவரது வாழ்க்கைப் பயணம்07.10.1994 அன்று முடிவுற்றது.

# உயர்திரு கே. ஏ. செங்கோட்டுவேல்




கதிரநல்லூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் 1975 இல் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டார். தமிழகத்தில் பால் பெருக்கத் திட்டத்தின் மூலம் உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் தேசிய பால்வள வாரியத்தின் தொழில்நுட்ப உதவியுடன் ஈரோடு மற்றும் நாமக்கல்லில் பால் சேகரிப்பு குழு அமைக்கப்பட்டு கிராமங்களில் பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் துவங்கப்பட்டன.

ஈரோட்டில் தேசிய பால்வள வாரியத்தின் அதிகாரியாக இருந்த திரு டாக்டர் மாதவன் அவர்கள் மரியாதைக்குரிய எஸ் கே பரமசிவ கவுண்டர் எக்ஸ் எம்பி அவர்களை முன்னிலைப் படுத்தியும், நாமக்கல்லில் திரு.எ.பத்மநாபன் அவர்கள் மரியாதைக்குரிய கே.ஏ.செங்கோட்டுவேல் பி.ஏ. அவர்களை முன்னிலைப் படுத்தியும் கிராம பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் துவங்கப்பட்டன.



கறவை மாடுகள் உள்ள கிராமங்களை தேர்வு செய்வதையும் அக்கிரமங்களிலிருந்து பால் எடுத்துச் செல்லும் பால் வழிப்பாதை அமைத்து, பால் குளிரூட்டும் நிலையத்திற்கு சங்கங்கள் சேகரித்த பாலை லாரி மூலமாக எடுத்துச் செல்வதையும், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் கிராமத்தில் மாலையில் நடத்தும் கூட்டங்களில் சங்கத் தலைவர் நிர்வாகிகள் மக்களாலேயே தேர்வு செய்யப்பட்டதையும், வாராந்திர மற்றும் அவசர கால இலவச மருந்துடன் கால்நடைகளுக்கு வைத்தியம் செய்யும் திட்டத்தையும், பால் சேகரிப்பு குழுவின் ஆலோசனை நாளும் கிராம பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் சீரான முறையில் நேர்மையாக நடைபெறுவதையும் கோடிட்டு காட்டி இது போன்ற நடவடிக்கைகளால் மட்டுமே கிராம பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்து கூட்டுறவு இயக்கத்திற்கு பேராதரவு நல்கி வருகிறார்கள் என்ற கருத்தை உயர்திரு. எல்.கே.ஜா தலைமையிலான ஒருகமிட்டியின் கூட்டத்தில் விவரமாக எடுத்துரைத்தார் தலைவர் கே.ஏ.செங்கோட்டு வேல் அவர்கள். குஜராத்தின் அமுல் மாதிரி போல் தோற்றுவிக்கப்பட்ட பால் உற்பத்தியாளர் சங்க கூட்டுறவு சங்கங்கள் மிகவும் நன்றாக இயங்குகின்றன என்று அக்கமிட்டி பாராட்டி சென்றது.

இப்படியாக சேலம் மாவட்டத்தில் கிராமங்களில் பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் சுமார் 400 என்ற அளவில் செயல்பட்டு வந்த நிலையில் சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் பதிவு செய்யப்பட்டது. மூன்றடுக்கு அதாவது கிராம சங்கங்கள் மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் மாநில பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு இணையம் துவக்கப்பட்டது.

பால்வளத்துறை ஆணையர் உத்தரவின்படி முதன்மை அலுவலராக பொறுப்பேற்ற திரு கே ஏ செங்கோட்டுவேல் அவர்கள் ஒவ்வொரு கிராமச் சங்கங் களுக்கும் சென்று அந்தந்த சங்கத் தலைவர்களிடம் உரையாடி பங்குத் தொகையை பெற்று சேலம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் பதிவு செய்ய வழி வகுத்தார்கள். பால்பண்ணைக்காக நிலமும் இவரால் வாங்கப்பட்டது.

இந்தியாவில் தற்போது தனியாரும், கூட்டுறவும் போட்டி போட்டுக் கொண்டு பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கி வருவதற்கு மூல காரணம் திரு கே.ஏ. செங்கோட்டுவேல் அவர்களே ஆகும்.

திரு.கே.ஏ. செங்கோட்டுவேல் அவர்களின் அயராத உழைப்பினாலும், இடைவிடாத முயற்சியாலும் கிடைத்த வெற்றி தான் பால் உற்பத்தியாளர்களின் வாழ்க்கை தரம் உயர்வுக்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும் வழி காட்டியது என்றால் அதுசற்றும் மிகையாகாது.

இவ்வாறு பால் உற்பத்தியாளர்கன் நலனேமுக்கியமெனக் கருதி தமது இறுதி மூச்சு வரை திரு.கே.ஏ. செங்கோட்டுவேல் அவர்கள் செயல்பட்டார்கள் என்பதை சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகிறோம்.



# இரத்த சோகை



பத்மஸ்ரீ கொங்குமாமணி
**டாக்டர் வி.எஸ்.நடராஜன்**
முதியோர் நல மருத்துவர் சென்னை

இரத்தமும் ஓர் உறுப்பு தான். நம் உடலில் ஓடும் இரத்தம் இரத்த அணுக்களால் நிரம்பியது. இரத்தத்தில் சிவப்பு அணுக்கள், வெள்ளை அணுக்கள், தட்டு அணுக்கள் என்ற மூன்று அணுக்களும் பிளாஸ்மா என்னும் திரவத்தில் மிதந்து உடலின் பல பாகங்களுக்குச் செல்கின்றன.

முழு இரத்த விவரம் (சி.பி.சி.)

கையிலிருந்து எடுக்கும் ஒரு சொட்டு இரத்தத்தின் மூலம் பல பரிசோதனைகளைச் செய்ய முடியும்.

### ஹீமோகுளோபின் அளவு

ஆண்கள்: 13-17 gm/dl

பெண்கள் : 12-15 gm/dl

10 கிராமிற்குக் குறைவாக இருந்தால் இரத்தச்சோகையாகும்.

இரத்தம் எலும்பில் உள்ள மஞ்சையிலிருந்தும், மண்ணீரலிருந்தும் உற்பத்தியாகிறது. இதற்கு சிறுநீரகத்தில் உள்ள ஏரித்ரோபோய்டின் எனும் ஹார்மோன் உதவுகிறது.

### காரணங்கள்

- சத்துணவு குறைபாடு
- வயதான காலத்தில் பசியும், ருசியும் குறையும் அதனால் உண்ணும் உணவின் அளவும் குறையும். இதனால் இரத்தசோகை வர முதுமையில் வாய்ப்புண்டு.உடலில் உள்ள இரத்தம் குறைதல்
- வயிறு மற்றும் குடலில் ஏற்படும் புண், சாதாரணக் கட்டி மூலம் புற்றுநோய்
- நோய்தொற்று அடிக்கடி ஏற்படும் நோய் தொற்றினாலும் இரத்தசோகை ஏற்படலாம்
- விபத்து மற்றும் இருதய அறுவை சிகிச்சை மூலமும் உடலில் இரத்தம் குறையலாம்
- இரத்தசோகைக்கு சிறுநீரக செயல் இழப்பும் ஒரு முக்கியமான காரணமாகும்
- எலும்பு மஞ்சையிலிருந்து உருவாகும்

புற்றுநோய். இது ஒரு விதமான எலும்பில் இருந்து தோன்றும் புற்றுநோயாகும்.

- குடலில் உள்ள புழுக்களினாலும் இரத்தசோகை ஏற்படலாம். உதாரணம்: கொக்கிப்புழு

### மருந்துகள்

புற்றுநோய்க்கு மற்றும் வலிப்பு நோய்களுக்கு கொடுக்கும் மருந்துகள் உயர் இரத்த அழுத்ததிற்கு கொடுக்கும் மருந்துகள் (Ace inhibitors), நீரிழிவு நோய்க்கு கொடுக்கும் மெட்ஃபார்மின் மாத்திரை, வயிற்று எரிச்சலுக்கு கொடுக்கும் ஆண்டாசிட் மாத்திரைகள் (Proton Pump inhibitors)

### சிகிச்சை முறைகள்

இரத்த சோகைக்கான காரணத்தை கண்டறிந்து அதற்கு தக்க சிகிச்சை அளிக்க வேண்டும். உதாரணம் : வயிறு, குடலில் கட்டி அல்லது புற்றுநோய் இருந்தால் அதற்கு தக்க சிகிச்சை அளிக்க வேண்டும்.

குடற் புழு காரணமாக இருந்தால் அதற்கு Albendozole 400 mg, ஒரு மாத்திரை



எடுத்துக் கொள்ளலாம்.

இரத்ததில் உள்ள ஹீமோகுளோபின் அளவைப் பொறுத்து, இரும்புச் சத்து மாத்திரை, திரவம் அல்லது ஊசி வழியாக சிகிச்சை அளிக்கலாம். பழையநிலைக்கு வருவதற்க குறைந்தது இரண்டு மாதங்களாவது ஆகலாம். சிலருக்கு இரும்புச் சத்து மாத்திரையோடு, வைட்டமின் 12 மற்றும் ஃபோலிக் அமலமும் சேர்ந்து கொடுக்க வேண்டியிருக்கும்.

### இரத்தச்சோகைக்கான உணவுகள்

பேரீச்சை பழம், பீட்ரூட் ஜுஸ், சுண்டைக்காய், வேகவைத்த சிவப்பு சுண்டல் மற்றும் பாசிப்பயறு, கருப்பட்டி,பனங்கற்கண்டு, நாட்டுச் சர்க்கரை, கருப்புத் திராட்சை, பீர்க்கங்காய், நெல்லிக்காய், கறிவேப்பிலை, மாதுளம் பழம், செவ்வாழைப்பழம், கொய்யாப்பழம், ஆப்பிள், கீரை வகைகள்.

அசைவ உணவு உண்பவர்கள் இறைச்சி மற்றும் பால், தயிர், பாலாடைக் கட்டி ஆகிய வற்றை சற்று அதிகம் சேர்த்துக் கொள்ளலாம்.

முதுமையில் இரத்தசோகை ஏற்படுவதற்கு ஒன்றிற்கு மேற்பட்ட பல காரணங்கள் உள்ளன. ஆகையால் முதியோரை முழுமையாக பரிசோதித்து தேவைப்பட்டால் இரத்த பரிசோதனை செய்து, அதற்குண்டான காரணத்தை கண்டறிந்து தக்க சிகிச்சை அளிப்பது மிக மிக முக்கியம்.



**“தன்னம்பிக்கைச் சிந்தனை”**

உழைப்பதில்
மகிழ்ச்சி
காண்ப
வர்களைப் பார்க்கும்
போதெல்லாம் வளர்ச்சி
இன்னொரு பிறவி எடுக்கிறது!

– சிந்தனைக் கவிஞர்
கவிதாசன்

கவிதை

மருத்துவர் திரு.இரா.ஆனந்தகுமார் இ.ஆ.ப.

# இன்னொரு தாய்

நீண்ட நெடிய,
வாழ்க்கைத்தடத்தில்,
நம்மை களைப்பறியாமல்
கைப்பிடித்து
அழைத்துச்சென்ற
உறவுகளைப் படம்பிடிக்கும்
முயற்சியின் அடுத்த
படைப்பு அத்தை!
இது,
வாழையடி வாழையாய்
உறவுகளை, நட்புகளை
ஒன்றாய் சேர்த்து
நன்றாய் கோர்த்து வைத்த
எண்ணற்ற அத்தைகளின்
புகழ்பாடும் கவிதைக்
கதம்பம்!

எங்கும் இவள் இல்லாமல் இல்லை
இனிய குடும்பம்!
கூட்டுக் குடும்பத்தில்
கொடி கட்டிப் பறக்கும்
குடும்ப தங்க மங்கையிவள்!
ஆலமரத்தின் ஆதி விழுது !
பணியால் களைத்துப்
போனவர்களுக்கு
ஓய்வு தரும் மாலைப் பொழுது!
மழை பொழிந்த உடன்
மண்வாசனை போல
உறவுகளை நினைத்தவுடன்
முகமலரச் செய்வது
அத்தை எனும் ஒரு சொல் !
அது ஓர் ஆனந்த வில் !

மற்றெந்த உறவுகொண்டும்
சட்டென்று
பண்டமாற்று செய்யமுடியாத
மாற்றில்லாத சொத்தாய் !
நம் எல்லோருக்கும் உண்டு.
ஒவ்வொரு அத்தை !
தைபிறந்தால் வழிபிறக்கும்
நாமறிவோம் !
அத்தை இருக்கிறாய்
எனக்கு வழி பிறக்கிறது
வலி பறக்கிறது !!
வலது கால் வைத்து வந்த
மிரட்சியை கண்கொண்ட
மாட்டுப்பெண்ணுக்கு
புத்துலகம் காட்டி.
தலைவாரி பூ முடித்து
மடிமீது உறங்கவைத்து
மெத்தைமடி தந்த
மற்றுமொரு தாயானாய்!
அவள்வீட்டு தோட்டத்தில்
அன்புமழை பொழிந்தாய் !



அப்பாவிடம் அடிவாங்கி
ஓடும் உன் அருமை
மருமகனின் நல்ல
அடைக்கலம் நீ !
அவர், தயங்கிய
அதிக விலை கொண்ட
டீ சர்ட்டை வாங்கித்தரும்
என் இனிய படைக்கலம் நீ!

ஆயிரம்பேர் சொன்னாலும்
அசராமல் என்மேல்
நம்பிக்கை வைத்து
அரியர் இல்லாமல்
கிளியர் செய்ய
வைத்த அபார ஆசிரியை !
அந்த நிலாவே தூங்கும்வரை
மொட்டை மாடியில் தாலாட்டுப் பாடிய.
பாட்டு கேட்க விழித்திருந்து
எப்போது தூங்கினோம் என

தெரியாமல் தூங்க
வைத்த கான தேவதை
நாங்கள் காணும் தேவதை!
கோழி குருமா முதல்
வெண்பொங்கல் வரை
தட்டில் வைத்தால்
உன் கைவரிசை காட்டும்!
அது உனக்கென ஒரு கைப் பக்குவம்!
உன் சமையல் தனி தத்துவம்

மருமகன் படிக்கும் கல்லூரிக்கு
அப்பாக்கு தெரிந்தும்
தெரியாமலும்
மாதம் தவறாமல்
மணியார்டர் அனுப்பிய
அவனுக்காக இயங்கிய
உலக வங்கி ! உதவப் பிறந்த
சுமைதாங்கி!

அவன் விரும்பிய பெண்ணை
வீட்டுக்குள் சாமர்த்தியமாக
சேர்த்துவைத்த சமாதான இடிதாங்கி
சர்வகால ஷாக் அப்ஸார்பர் !
அமைதி அப்ஸர்வர்!

காலடி வைக்கும்முன் கவனமாக
வீட்டு சீதோஷ்ணநிலை
வாசிக்கும்
குடும்ப வானிலை அறிக்கை
இரமணன் நீ!
நேரம் பார்த்து விஷயம்
கோர்க்கும்
மேலாண்மை நிபுணி.
வீட்டுத்தோட்ட
வேளாண்மை விஞ்ஞானி !

வேலைக்குப் போகும்வரை
வேளைக்குச் சோறுபோட்ட
அட்சய பாத்திரம் மறந்து
பிறந்த மணிமேகலை
அத்தை!

ஊருக்கு வரும்போதெல்லாம்
முறுக்கு வைத்திருப்பாய்,
முறுக்கி கொண்டு
கோபித்தால் உறவைக்காட்டி
மனதை தேற்றி
வெள்ளைக்கொடி
ஏற்றிவைத்த
வெள்ளந்தி நீ!
சமாதானப் புறா!
வாழ்வின்
எதிர் நீச்சல் சுறா!

வெகு நேர பின்னிரவில்
காற்றே உறங்கும் சினிமா
விட்ட
நெடும்பயணம் தொட்ட
பசி வயிற்றில்
கரிசனம் வளர்த்த
தோசை தந்து
மல்லிச் சட்னியோடு
மலர்ந்த முகத்தில்
களைப்பு தேடினாலும்
கிடைக்காது!!
சுட சுட சட சட என
சுட்டுப்போட்ட வேகம்
தனி விவேகம்!
அத்தை நுழைந்த உடன்
சமையலறை
கோவிலாகி
தட்டில் விழும் இட்லிகள்
பிரசாதமாகின்றன!!

அத்தை !! சொல்லியது
கொஞ்சம்
சொல்லாதது கெஞ்சும்!
இன்னும் எவ்வளவோ
வகையில் எனை
பாதுகாத்து
வளர்த்தெடுத்தாய்
நீ எனக்கு நிச்சயமாய்
இன்னொரு தாய் !

நேர்காணல்



# “இலட்சியவாதிகளை உருவாக்கும் இலட்சியவாதி”

## சிந்தனைக்கவிஞர் கவிதாசனுடன் ஓர் நேர்காணல்

**1 தங்களின் பெயர்க் காரணத்தைத் தெரிந்து கொள்ளலாமா?**

நான் கோவை அரசு கலைக்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது 1982-ம் ஆண்டு பாரதி நூற்றாண்டுக் கவியரங்கம் ஒன்றில் கலந்து கொண்டு முதற்பரிசு பெற்றேன்.

அப்போது கவியரங்கத் தலைவர் கவிஞர் திரு முத்துலிங்கம் அவர்கள் என்னைப் பரிசு பெற அழைத்தபோது

*பாரதிக்குத் தாசனான் கனக சுப்புரத்தினம்!*
*கண்ணனுக்கு தாசனான் முத்தையா!*

அதுபோல,

*"கவிதைக்கு தாசனாக நிற்கும்*
*கோவை முருகேசன்"!*

முதலிடம் பெறுகிறார் என்றார்.

பின்னர் எனது பெயரை கவிதாசன் என்றே மாற்றிக் கொண்டேன். இதுவே எனது அதிகாரப் பெயராகிவிட்டது இன்று.

**2. தங்கள் வாழ்க்கையின் திருப்புமுனையாக எதைச் சொல்வீர்கள்?**

நான் ஆரம்பத்தில் சாதாரண மாணவர்களைப் போலவேதான் இருந்தேன். மிகப்பெரிய இலக்குகளோ, இலட்சியங்களோ இன்றி காற்றடித்த திசையில் செல்லும் சிறகு போல் எனது மாணவப்பருவம் சென்று கொண்டி ருந்தது.

அந்தச் சமயத்தில் கல்லூரியில் இலக்கியக்கூட்டம் ஒன்று நடந்தது.சிந்தனையாளரும், தன்னம்பிக்கைப் பேச்சாளருமான பேராசிரியர் திரு.இல.செ.கந்தசாமி அவர்கள் சிறப்புரை வழங்கினார். இடி முழக்கம் போல் இருந்த அவரது பேச்சில் அரங்கமே அதிர்ந்தது. கூட்டத்தின் ஆரம்பத்தில் இருந்த கூச்சல்களும், கேலிப்புன்னகைகளும் மறைந்து அரங்கம் இறுக்கமான அமைதியில் ஆழ்ந்தது. அவரது கேள்விகள் ஒவ்வொன்றும் மனிதரின் பிடறியை உலுக்கியதாக அமைந்தது. உணர்வுள்ள

எதை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறீர்கள்? உங்கள் பெற்றோரின் பணத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறீர்களா? உங்கள் இலட்சியம் என்ன? என்பது போன்ற கேள்விகள் எங்கள் நெஞ்சில் ஆணியடித்தது போல் இருந்தன.

ஒரு கட்டத்தில் நான் எழுந்து, 'வாஸ்கோடகா மாவிற்கு வழிகாட்டியது யார்?' என்று கேட்டேன். அரங்கமே சிரிப்பொலியால் அதிர்ந்தது. ஆனால் அவர் கோபமடைந்தார். உன்னால் நிச்சயம் சாதிக்க முடியும்! முயற்சி கொள் ! என்றார்.

மேலும், ஒரு தன்னம்பிக்கைப் பயிலரங்கில் நான் பேசிக் கொண்டிருந்தபோது, திருப்பூரைச் சேர்ந்த திரு.VIP தியாகராஜன் அவர்கள் எல்லோருக்கும் இலட்சியம் வேண்டும் என்றீர்களே! உங்கள் இலட்சியம் என்ன? என்று கேட்டார். அதற்கு "இலட்சியவாதிகளை உருவாக்குவதே எனது இலட்சியம்" என்று கூறினேன். அது எனது வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டு மாணவர்களையும், இளைஞர்களையும் இலட்சியவாதிகளாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறேன்.

அந்தக் கணத்தில்தான்

*முயற்சியும் பயிற்சியும் இருந்தால்*
*சாதாரண மனிதரும் சாதனையாளராகலாம்!*

என்ற மந்திரம் எனக்கு ஊற்றெடுத்ததை உணர்ந்தேன். பல இரவுகளை தூங்க விடாமல் செய்த இலட்சிய வேட்கையை எனக்குள் உருவாக்கிய பேச்சாக அது அமைந்தது. அதன்

விளைவு தான் சாதாரண மாணவராக இருந்த நான் இலட்சியத்தால் உந்தப்பட்டு அந்த ஆண்டின் இறுதியில் பல்கலைக்கழகத்தில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவராக வந்து அப்போதைய மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களிடம் தங்கப்பதக்கம் பெற்றேன். இதுவே எனது வாழ்வின் மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது.

*இலட்சியம் இல்லாத வாழ்க்கை*
*துடுப்பில்லாத படகைப் போன்றது*
*காற்றுக்கு அசையலாம் - ஆனால்*
*கரை சென்று சேராது!*

என்பதை பல்லாயிரக் கணக்கான இளைஞர் களுக்கு நான் எடுத்துச் சொல்ல வைத்தது.

அதன்பின்னர் எத்தனையோ திருப்பு முனை களைச் சந்தித்தாலும் என்னை வெற்றிப்பாதையை நோக்கித் திருப்பியதாக இந்த நிகழ்வு அமைந்தது.

**3. தங்களது சிறு வயதுச் சுவையான அனுபவத்தைச் பகிர்ந்து கொள்வீர்களா?**

*நான் ஏழை விவசா யியின்*
*வீட்டில் பிறந்தவன்.*
*ஏழ்மையுடன் எனக்கு நெருங்கிய*
*நட்பு இருந்தது.*
*சிறு வயதில் வெயிலை எப்படித்*
*தாங்கினேன் என்றால்*
*காயுது தீயுது என்று*
*சிறு வயதில் மழையை எப்படி*
*எதிர் கொண்டேன் என்றால்*
*நனைந்து தொலைந்து*
*வறுமையில் நான் எப்படி*
*வாழ்ந்தேன் என்றால்*
*பட்டினி கிடந்து*

இப்படித்தான் என் சிறுவயது வாழ்க்கை இருந்தது. ஆனால் அதுவும் எனக்கு இனிப்பாகவும் உவப்பாகவும் என் நினைவடுக்குகளில் நிலைபெற்றி ருக்கிறது. எதையும் எதிர் கொள்ளும் பேராற் றலை அந்த நினைவுகள் எனக்கு வழங்கிக் கொண்டே இருக்கின்றன.

எத்தனை எத்தனையோ அனுபவங்கள்!



நான் கோவை மாவட்டம் சின்னத்தடாகம் அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவனாக இருந்த போது எனக்குத் தமிழாசிரியராக இருந்தவர் கா.து.அப்பாவு அவர்கள்.

வார இறுதி வெள்ளிக்கிழமைகளில் நாள் முடியும் நேரத்தில் மாணவர்கள் மிகுந்த சோர்வுடன் இருப்பார்கள். எப்போது பள்ளி முடியும் என்று ஏங்கி நிற்பார்கள். அதை சரி செய்ய அவர் ஆக்கபூர்வமான ஒரு நடை முறையைச் அறிமுகப்படுத்தினார்.

அதன்படி, ஒவ்வொரு மாணவரையும் ஏதாவது ஒரு தலைப்பில் இரண்டு மணித்துளி களாவது பேச வேண்டும். எனக்கோ இது என்ன புதிய பிரச்சினை என்று தோன்றி யது. என் முறை வருகிற சமயமாகப் பார்த்து நைசாக நழுவி பள்ளிக்கூடத்தின் புதர் ஒன்றின் மறைவில் போய் ஒளிந்து கொண்டேன். என்னைக் காணாத ஆசிரியர் ஒரு மீட்புப்படையை அனுப்பி அவர்கள் என்னைத் தேடிக் கண்டுபிடிப்பதற்குள் பள்ளி முடிந்ததற்கான மணி தேவகானமாக ஒலித்தது. கடவுள் இருக்கிறான் என்பது நிருபணமான தருணம் அது, ஆனால் மறுவாரம் திங்கள்கிழமை காலை முதல் வகுப்பு தமிழ்! ஆசிரியர் அதே கா.து. அப்பாவு அவர்கள் மாணவர்கள் முன் நிறுத்தப்பட்டேன். எனக்கு கொடுத்திருந்த தலைப்பு இப்போதும் நினைவில் இருக்கிறது. "நான் முதல்வரானால்" என்ன பேசினேன் எப்படிப் பேசினேன் என்று தெரியாது. மாணவர்கள் கைதட்டினார்கள். ஆசிரியர் என் முதுகைத் தட்டிக் கொண்டிருக்கிறார். கனவுலகில் மிதப்பது போல் உணர்ந்தேன்.

அன்று ஆரம்பித்த பேச்சு இன்றும் பல்லாயிரக்கணக்கான பலதரப்பட்ட மேடைகளைக் கடந்தும் தொடர்கிறது!

கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா சுவாமி சிவானந்தா மேனிலைப் பள்ளியில் படிக்கும் போது இயற்பியல் ஆசிரியர் திரு. பிராபாகரன் அண்ணா அவர்களின் வழிகாட்டுதலில் நான் செய்த அறிவியல் ப்ராஜக்ட்டின் பெயர் "Light in the Dark" அதாவது "இருளில் இருந்து ஒளி" அந்த ப்ராஜக்ட் மாநில அளவில் முதல் பரிசு பெற்றது மறக்க முடியாத ஒன்று. 1981ம் வருடம் அதற்கான பரிசை அப்போதைய தமிழ் நாடு முதலமைச்சர்

மாண்புமிகு எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களது கரங்களில் பெற்றுக் கொண்டேன்.

மேலும், சுவாமி சிவானந்தா பள்ளியில் பயின்று கொண்டிருக்கும்போது எனது சகோதரர் முனைவர். அரங்க.கோபால் அவர்கள், "நான் மேடையில் பேசுவதற்கு கருத்துக்களை வழங்கி பயிற்சி கொடுத்தார். இவையெல்லாம்தான் எனது முன்னேற்றத்திற்கு அடித்தளமாகவும், திருப்பு முனையாகவும் அமைந்தது.

**4. தங்கள் பெயருக்கு முன்னால் உள்ள பட்டத்தை வழங்கியவர் யார்?**

கோவை பூசாகோ கலை அறிவியல் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது அங்கே சிந்தனை மன்றம் என்ற அமைப்பைத் தொடங்கினேன். அதன் நோக்கம் மாணவர்களின் சிந்தனைத் திறனையும், படைப்பாற்றலையும் வளர்ப்ப தாகும். அது இன்றளவும் மிகச்சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

அப்போதைய கல்லூரியின் செயலாளரும், முதல்வருமான திரு பா.சம்பத்குமார் அவர்கள் என்னை வாழ்த்தி சிந்தனைக் கவிஞர் என்று அழைத்தார். பின்னர் பலரும் மேடைகளில் சிந்தனைக்கவிஞர் கவிதாசன் என அழைக்க ஆரம்பித்து அதுவே எனது பட்டமாகவும் நிலைத்துவிட்டது.

**5. தங்களது கவிதைகளில் சிந்தனைத்துளிகள் அதிகம் உள்ளதற்கு காரணம்?**

கவிதை அல்லது எழுத்து ஆகியவை பொழுது போக்கிற்காகப் படித்து அந்த நேரத்தில் மட்டுமே இலக்கிய இன்பம் தரக்கூடியதாக இருப்பதை நான் விரும்புவதில்லை.

கவிதை என்பது படிப்பவர் நெஞ்சில் பதிந்து அவரது வாழ்க்கையின் நிகழ்வுகளில் அவரை வழி நடத்துவதாகவும், சவால்களைச் சந்திக்கும்போது துணை நிற்பதாகவும், அவரை இலட்சியத்தை நோக்கி வழி நடத்துவதாகவும், வெற்றி குறித்தான சிந்தனைகளை அவர் நெஞ்சில் உருவாக்கும் கிரியா ஊக்கிகளாகவும் அமைந்தாக வேண்டும்.

சுதந்திரப் போரில் பாரதியின் கவிதைகளை எண்ணிப்பாருங்கள். போராட்டக் களங்களில், அடுத்த வேளை உணவிற்கு நிச்சயமில்லாத போதும் கண்களில் நம்பிக்கை ஒளியை தேக்கி வைத்து நமது நாட்டின் விடியலுக்கான உறுதிகளை அளித்த கவிஞர்களின் கவிதைகளே உலகின் சாகாவரம் பெற்றவையாக இருக்கின்றன.

ஒரு பட்டாம்பூச்சியின் சிறகசைப்பு ஒரு பெரும் பிரளயத்திற்கான ஆதி மூலமாக இருக்கலாம் என்பது கேயாஸ் தியரி.

எனது எழுத்துக்கள் சமுதாய முன்னேற்றத்திற்கான உற்சாகத்தை அளிக்கின்றவையாக அமைந்தாக வேண்டும் என்ற குறிக்கோளோடுதான் எனது கவிதைகள் அமைகின்றன. மேலும் எனது எழுதுகோல் தலைகுனியும்போது இந்த சமுதாயம் தலை நிமிர வேண்டும் என்ற நோக்கில் எழுதுகின்றேன்.

**6. சிந்தனைக்கவிதைகள் உங்கள் சொந்த அனுபவத்தில் உருவான கவிதைகளா?**

நான் ரூட்ஸ் குரூப் நிறுவனங்களில் கடந்த 30 ஆண்டுகளாக மனிதவள மேம்பாட்டுத்துறையின் இயக்குநராக பணியாற்றுகிறேன். நாள்தோறும் ஆயிரக்கணக்கான பணியாளர்களுடன் தேவைகள், பிரச்சினைகள் எனது பார்வைக்கு வருகிறது. பணியாளர்களின் வாழ்வியல் முன்னேற்றம், மனித வளச்சிந்தனைகள் குறித்து நான் எப்போதும் சிந்தித்து புதிய முன்னோடியான திட்டங்களை அறிமுகப்படுத்துவதில் ஆர்வம் கொண்டு செயல்பட்டு வருகிறேன்.

கோவை மாவட்டம் கல்லாறு பகுதியில் இயங்கி வரும் சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டுப் பள்ளியின் செயலராகவும் நான் பொறுப்பேற்றிருப்பதால், எதிர்கால சந்ததியரின் கனவுகள், அவர்களின் செயல்திறன், அறிவாற்றல், இலக்குகள் குறித்தான சிந்தனைகள் என்னை வந்தடைகின்றன. அவர்களைச் சமுதாயத்தில் பொறுப்பான மனிதர்களாக மாற்றும் முயற்சியில் ஆசிரியர்களை வழி நடத்துகிறேன்.

பல்வேறு இலக்கிய அமைப்புகள், அரசு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், தொழில் அமைப்புகளில் பல்வேறு பொறுப்புகள் வகிப்பதால் சமுதா யத்தின் இன்றைய நிலை, எதிர் கொள்ளும் பிரச்சினைகள் எதிர்காலத்தில் சந்திக்க வேண்டிய சவால்கள் குறித்து ஒவ்வொரு நாளும் சிந்திக்கவும், சிந்தனைகளைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.





எனது சிந்தனைகளுக்கான விளைச்சல் நிலமாக நான் வகிக்கும் பொறுப்புகள் அமைந்து விடுகின்றன. உணர்வு மேலாண்மை, வாழ்வியல் குறித்தான எனது சிந்தனைகள் நான் நேரில் கண்ட மனிதர்களின் பிரச்சினைகள் அவற்றிற்கான தீர்வுகள், நான் அறிமுகப்படுத்துகின்ற புத்தாக்கத் திட்டங்கள் அவற்றினால் கிடைக்கின்ற பயன்கள் ஆகியவற்றை நான் ஒரு எழுத்தாளராக அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் படைக்கிறேன், சமர்ப்பிக்கிறேன்.

**7. தங்களுடைய சமூக சிந்தனையைப் பற்றி எங்களுடன் பகிர்ந்து கொள்வீர்களா?**

எனது சிந்தனைகளில் சிறப்பானவை என்று தோன்றுவதை நான் எனக்குள் அணைகட்டித் தேக்கி வைக்கும் பழக்கம் என்றும் எனக்கு இருந்ததில்லை.

உடனடியாக அதை கட்டுரையாகவோ, கவிதைகளாகவோ அல்லது அடுத்து நான் பங்கேற்கும் மேடைகளிலோ அந்தச் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்வேன்.

இன்றைய சமுதாயத்திற்கு அத்தியாவசியத் தேவையாக நான் கருதுவது உணர்வு மேலாண்மை மற்றும் நேர மேலாண்மை.

வாழ்க்கையை அணுஅணுவாக ரசித்து வாழ முடியாத வகையில் உலகம் பரபரப்பான தாகிவிட்டது. ஓட்டத்தை நிறுத்துபவர்கள் பின் தங்கி விடுவார்கள்.

என்னால் முடியுமா என்ற அவநம்பிக்கையை தூக்கி எறிந்து விட்டு என்னாலும் முடியும் என்ற தன்னம்பிக்கையுடன் செயல்பட வேண்டும்.

*முடங்கிக் கிடந்தால்*
*சிலந்தியும்*
*உன்னைச் சிறைப்பிடிக்கும்!*
*எழுந்து நடந்தால்*
*எரிமலையும்*
*உனக்கு வழி கொடுக்கும்!!*

வாழ்வின் கடந்து போன துயரங்களும் தோல்விகளையும் எண்ணித்

## *தன்னம்பிக்கைச் சிந்தனை*



பசியின்
கருவறையில்
பிறந்தவனுக்
குத்தான் சாதிக்க
வேண்டும் என்ற
வெறி இருக்கும்.
தடைகளைத்
தகர்க்கும்
துணிவிருக்கும்!

–சிந்தனைக் கவிஞர்
கவிதாசன்

துவண்டு கிடந்தால் முன்னேற்றப் பாதையின் வழிகள் தன்னைத்தானே மூடிக் கொள்ளும்.

*நேற்று என்பது*
*உடைந்த பானை*
*நாளை என்பது*
*மதில் மேல் பூனை*
*இன்று என்பதே*
*உன் கையில் உள்ள வீணை!*

இன்றைய வாழ்க்கை உனது கைகளில்! அதை இனிய ராகமாக மீட்டு! அர்த்தமுள்ளதாக்கு. அனுபவி, இலட்சியப் பயணத்திற்குக் கிடைத்த இன்னொரு நாள், முன்னேறு!. எதிர்கால வெற்றிக்கான தரவுகளைத் தேடு!, சேகரி!!

எக்காரணத்தை முன்னிட்டும் சோம்பல் எனும் சிலந்தி வலைக்குள் சிக்கிக் கொள்ளாதீர்!

இல்லற வாழ்வில் விட்டுக் கொடுத்துப் போகின்ற அனுசரித்துப் போகின்ற குணம் வெகுவாகக் குறைந்து விட்டதை நாம் காண்கிறோம். சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மிகப்பெரும் சிதைவாக அது உருவாகி வருகிறது.

*வெற்றியினால்*
*விரிசல்கள் வருமெனின்*
*அங்கே*
*ஜெயிப்பதை விட*
*தோற்றுப் போவதே சுகமானது!*

வாதங்களால் வழக்கு நடத்தலாம், ஆனால் வாழ்க்கை நடத்த முடியாது.

ஏனென்றால் விட்டுக் கொடுத்தல் என்பது தோற்றுப் போவதல்ல விதைப்பது.

என்பதை மனதில் இருத்திக் கொண்டால் வாழ்க்கை பூங்காவனமாகும். அங்கே மகிழ்ச்சிப் பூக்கள் மலர்ந்து மணம் வீசும்.

நான் மூன்று விதமான வாழ்க்கைக்கு ஆட்படுகிறோம். அதாவது தொழில், குடும்பம் மற்றும் சமுதாயம். தொழில் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு அறிவு ரீதியான அணுகுமுறையும், குடும்பம் மகிழ்ச்சியாக இருப்பதற்கு அன்பு ரீதியான அணுகுமுறையும், சமுதாயத்தில் மதிப்புடன் இருப்பதற்கு பண்பு ரீதியான அணுகு முறையும் தேவை.

**8. இக்கால இளைஞர்களுக்கு தாங்கள் கூறும் சிந்தனை, தத்துவம் (அ) அறிவுரை என்ன?**

உலகமயமான பொருளாதரத்தில் உலகம் ஒரு குடையின் கீழ் வாழும் சிறு கிராமம் ஆகிவிட்டது.

நமது இளைஞர்கள் போட்டி போடுவது அண்டை மாநிலத்தவருடன் அல்ல! மாறாக வளர்ந்து நிற்கின்ற அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுடன்,

மாபெரும் தொழிற்புரட்சி ஏற்படுத்தி பிரம்மாண்டமாக உருவாகிவிட்ட சீனா, ஜப்பான் போன்ற நாட்டின் இளைஞர்களுடன்.

நமது இளைஞர்கள் உலகளாவிய திறன் பெற்றிருக்க வேண்டும். தேவைப்படும் மொழித்திறன் கொண்டிருக்க வேண்டும்.

தாங்கள் மேற்கொள்ளும் கல்வி அல்லது தொழில் நுட்பத்தில் தொடர்ந்து தங்களைப் புதுப்பித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

*நேற்றைய பட்டதாரி-*
*இன்று படிப்பதை நிறுத்தி விட்டால்*
*நாளை படிக்காதவன் ஆகிவிடுவான்*



எனவே தொடர்ந்து கற்றல் அவசியம். கற்றல் என்பது ஒரு முடிவல்ல. அது ஓர் அறிவுப் பயணம்.

குறுகிய வட்டத்திற்குள் தங்களை அடைத்துக் கொண்டு திரைப்படம், கேளிக்கைகள் சமூக வலைதளங்களில் இயங்கிக் கொண்டிருப்பதே வாழ்க்கை என்று எண்ணக்கூடாது. போதையின் படுகுழிக்குள் வீழ்ந்து விடக்கூடாது.

தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் வெற்றிக்கான வழிகளைக் கண்டு பிடிக்க வேண்டும். ஏனென்றால் நேற்றைய தோல்வியின் பாடம் படிப்பவன், நாளைய வெற்றிக்கு பாதை அமைக்கிறான்.

தன்னிடம் உள்ள தனித்திறன் என்னவென்று அறிந்து, தெளிந்து அதில் ஆற்றல் கூட்ட வேண்டும்.

அதிவேகமான பயணத்திற்கும், அதிரடியான மாற்றங்களுக்கும் எப்போதும் தயார் நிலையில்



இருக்க வேண்டும்.

கல்வியை ஒரு தவமாகக் கருத வேண்டும். எந்த ஒரு படிப்பிலும் தேர்ச்சியடைவதால் மட்டுமே திருப்தியடையாமல் அதில் நிபுணத்துவம் அடைய முயற்சித்தல் வேண்டும். மேலும், நல்லொழுக்கம், தகவல் தொடர்பு திறன், அறிவாற்றல், படைப்பாற்றல், ஆகியவற்றை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

9. இலக்கியத்தோடு அறிவியலை ஒன்றிணைப்பது பற்றித் தங்களது கருத்து?

இலக்கியம் என்பது காலக்கண்ணாடி நமது முன்னோர்களின் பழக்க வழக்கங்கள், வாழ்வியல் முறைகள் கலைகள், கலாச்சாரங்கள், மருத்துவ அறிவு அனைத்தும் இலக்கியங்கள் மூலமே இன்றையத் தலைமுறைக்குக் கடத்தப்பட்டிருக்கின்றன.

மூட நம்பிக்கைகளை அறவே ஒழிக்கவும், அதிவேக மாற்றங்களை எதிர்கொள்ளும் மனோபக்குவத்தை இதயங்களில் விதைப்பதாகவும் இலக்கியம் அமைய வேண்டும்.

பெரும்பாலான அறிவியல் கண்டுபிடிப்புகள் மற்றும் அனைத்தும் பிற மொழிகளிலேயே அமைந்திருக்கின்றன.

அவற்றை நம் அன்னைத்தமிழுக்கு மொழி மாற்றம் செய்தாக வேண்டிய கட்டாயம் நம் இலக்கியவாதிகளின் பொறுப்பாக இருக்க வேண்டும்.

அறிவியல் மற்றும் கலைச்சொற்கள் புதிதாகக் கண்டறியப்பட வேண்டிய அவசியம்.

பொறியியல், மருத்துவம், செயற்கை நுண்ணறிவு என அனைத்தையும் நம் மாணவர்கள் தமிழில் படிக்கச் செய்ய வேண்டும்.

இதை தமிழறிந்த சான்றோர்கள் தம் கடமையாகச் செய்தாக வேண்டும் என்பது என் விருப்பம்.

10. இக்கால அறிவியல் பற்றித் தங்கள் கவிதையில் கூறுவது என்ன?

அறிவியலில் எல்லாம் சாத்தியமே! அறிவுக்கு எட்டாத விஷயங்கள் ஆன்மிகமாகிறது.

எங்கு அறிவியல் முடிகிறதோ அங்கு ஆன்மிகம் தொடங்குகிறது என்கிறார்

### தன்னம்பிக்கைச் சிந்தனை



இன்பத்தின்
பக்கத்தில்
இருக்கவே மனம்
ஆசைப்படுகிறது.
அன்பை
விதைப்பவர்கள்
மகிழ்ச்சியை
அறுவடை
செய்கிறார்கள்!

–சிந்தனைக் கவிஞர்
கவிதாசன்



வீரத்துறவி விவேகானந்தர்.

கோவை வேளாண் பல்கலையில் நான் ஒரு கவிதை படித்தேன்

*நெல்மரம் வேண்டும்*
*அது*
*நெற்றியுயரம்*
*வளர்ந்திட வேண்டும்*
*பத்தடிகள் பறவிட வேண்டும்*
*அனுதினமும்*
*அறுவடை நிகழ் வேண்டும்*
*என்றாலும்*
*அடிமரம் அப்படியே இருக்க வேண்டும்*

**11. தங்கள் பார்வையில் இக்கால மாணவர்களின் சிந்தனை எவ்வாறு உள்ளது?**

இன்றையத் தலைமுறை மிக வேகமாகச் சிந்திக்கிறது, செயல்படுகிறது, உணர்ச்சிப் பெருக்கோடு இருக்கிறது. எந்த ஒரு மாற்றத்திற்கும் ஏற்ப உடனுக்குடன் தம்மைத் தகவமைத்துக் கொள்கிறது. இன்றைய அதிவேக உலகில் இந்தத்தன்மை அத்தியாவசியமானதாக இருக்கிறது.

அவர்களும் அதைப் போதுமான அளவில் உணர்ந்திருப்பதாகவே நான் காண்கிறேன். இருப்பினும் தமிழ் நாடு போன்ற வளர்ந்து வருகின்ற மா நிலங்களில் இது நிறைவாகவும், இதர சில மாநிலங்களில் இது மிகக்குறைவாகவும் இருக்கிறது. இதில் சமநிலை எட்டப்பட வேண்டும். அதுவே ஒன்றுபட்ட இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் தீர்மானைக்கும்.

மாணவர்கள் தங்களுக்கு வேண்டிய ஆய்வுகளை, தரவுகளை, அறிவைத் தேடி மணிக்கணக்கில் நூலகங்களைத் தேடி, பற்பல நூல்களை இரவு பகலாகப் படிக்க வேண்டிய அவசியங்கள் இன்றி இணைய தளம் மூலம் அவர்களின் விரல் நுனியில் உலகம் சுற்றும் நிலை வந்து விட்டது.

எந்த ஒரு செயலையும் சிந்தித்து மூளையை கசக்கிச் செய்ய வேண்டிய அவசியமின்றி செயற்கை நுண்ணறிவின் தாக்கம் அறிவுலகைப் புரட்டிப் போட்டு விட்டது.

மாணவர்களுக்குத் தேவையான எந்த ஒரு தகவல் தொடர்பு, அறிவு, ஆற்றல், கற்றல் அனைத்தும் அவர்களின் கையில் இருக்கும் அலைபேசி மூலமாகவே கிடைத்து விடுகிறது. ஒட்டுமொத்த உலகத்தையும் இணைக்கின்ற சாதனமாக அவர்களுக்கு கிடைத்து விட்டது. அதாவது







ஒவ்வொருவருடைய உள்ளங் கையிலும் உலகம் இருக்கிறது.

ஆனால் வரமே சாபமாகவும் அமைந்திருப்பதையும் நாம் காண முடிகிறது. சமூக வலைதளங்கள் என்ற மாயவலைக்குள் சிக்கித் தங்கள் வாழ்க்கையைத் தொலைத்துக் கொண்டிருக்கும் இளைஞர் கூட்டத்தை நாம் வெளியேற்றியாக வேண்டும்.

அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சிகளைத் தங்கள் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளாக மாற்றிக் கொள்ளும் வித்தகத்தை அவர்களுக்கு சொல்லித்தர வேண்டும். இலட்சிய தீபத்தை அவர்கள் இதயங்களில் ஏற்றி வைக்க வேண்டும்.

**12. தங்கள் கவிதைகள் மூலம் இன்றைய மாணவர்களை எவ்விதம் ஊக்கப்படுத்துகிறீர்கள்?**

எனது கவிதைகள் மற்றும் எனது தன்னமிக்கைப் பொழிவுகள், சொற்றொடர்கள் அனைத்தும் இளைஞர்களின் இலட்சிய வேட்கையைத் தூண்டுவதாகவே அமைத்திருப்பேன்.

*உளிபடாத கற்கள் சிலையாவதில்லை*
*உழைப்பில்லாத கனவு நனவாவதில்லை*
*சுறுசுறுப்பு நெருப்பில்*
*சோம்பலைச் சாம்பலாக்கு!*
*நீயே ஒரு எரிமலை*
*என்பதை மறந்து விட்டு*
*அனலுக்காக*
*ஏன் ஏங்குகிறாய்?*

என்று அவர்களின் இலட்சியப் பயணத்தை ஊக்குவிக்கும் விதமாகவே எனது எழுத்துக்கள் அமைந்திருக்கும்.

*உங்கள்*
*முயற்சிச் சிறகுகளை*
*அசைக்கும்*
*மூன்றாம் கையே*
*தன்னம்பிக்கை!*

என்பதை எப்போதும் நான் அவர்களுக்குச் சொல்வேன்.

*பயிற்சியும், முயற்சியும்*
*தொடர்ச்சியாக இருந்தால்*
*சாதாரண மாணவரும்*
*சாதனையாளராகலாம்*
*உயரம் என்றால் எவரெஸ்ட்*
*உயரவேண்டும் என்றால் நெவர்ரெஸ்ட்*

என்பதை மாணவர்களுக்கு மத்தியில் எப்போதும் என் கவிதை எடுத்துரைக்கும்.



# உறவின் எல்லைகள்


V.S.கேசவன்,

வழக்கறிஞர், உயர் நீதிமன்றம், சென்னை.

Ph.9443384821


சென்ற ஆண்டு மூன்று மாதங்கள் ஆஸ்திரேலியாவில் மெல்பர்னில் மகள் வீட்டில் தங்கி இருந்தோம் நானும், மனைவியும். அப்போது பக்கத்து ஊரு கிட்டு அண்ணன், ஒரு ஃபோன் நம்பரை எனக்கு அனுப்பி, இந்தப்பையன் பேரு ஜெகதீஷ், நம்மூரு பையன்தான், அங்கதான் இருக்கார், முடிஞ்சா பார்த்திட்டு வா என்று சொன்னார். சரிங்கண்ணா என்று வாங்கிக்கொண்டேன். ஆனால் அதன்பின்பு சுத்தமாய் அந்த விஷயத்தை அப்போது மறந்தும்விட்டேன். அதனால் இதுபற்றி மீண்டும் கடைசியில் பார்ப்போம்.

இப்போது அடுத்த நிகழ்வு.

அங்கிருந்த போது ஏப்ரலில் நான்கு நாட்கள் நாங்கள் சிட்னி சென்றிருந்தோம். எங்களுடன் கைலாயப்பயணத்தில் கலந்துகொண்ட திரு. நரசிம்மன் சார், அவரது மகளும், மருமகனும் சிட்னியில் இருப்பதால், அவர்கள் வீட்டிலேயே எங்களை தங்கிக்கொள்ள சொன்னார். அப்படியே செய்தோம். மிகச்சிறப்பாக அந்த நான்கு நாட்களும் எங்களை அவர்கள் கவனித்துக்கொண்டனர்.

அப்போது பேஸ்புக்கில் பகிர்ந்த புகைப் படங்களை பார்த்துவிட்டு, ஃபேஸ்புக் நண்பர் பிரியா, சிட்னி வந்திருக்கீங்களா, வீட்டுக்கு டின்னருக்கு வாங்க என்று அழைப்பு விடுத்தார். அவர் அங்கு அவரது கணவருடன் இணைந்து டிசைனிங் நிறுவனம் நடத்தி வருகிறார். ஃபேஸ்புக் மூலம் மட்டுமே நட்பு, மற்றபடி பரஸ்பரம் எந்த அறிமுகமும் இல்லை. அவர் குடும்பத்திலும் ஒருவரையும் தெரியாது அப்போது.

அவர் அழைப்பிற்கு அடுத்த நாள் நாங்கள் சிட்னியில் இருந்து மெல்பர்ன் திரும்ப வேண்டும். அதனால் டின்னருக்கு வர இயலவில்லை, டீ மட்டும் போதும் என்று சொல்லிவிட்டு அவர் வீட்டுக்கு முதல் நாள் மாலையில் சென்றோம்.

வீட்டில் அவரது மாமியார் எங்க ஈரோட்டு பாஷையில் என்னுடன் பேசத்தொடங்கினார். என் வயதுதான் இருக்கும் அவங்களுக்கும்.

ஓ இவங்க எல்லாம் நம்ம பக்கம் போலிருக்கு

என்று நினைத்துக்கொண்டே அவருடன் உரையாடலை தொடர்ந்தேன்.

அவர்: நீங்க எந்தூருங்?

நான்: சிவகிரி பக்கம் வேலாயுதம்பாளையம்ங்க. சின்ன ஊருங், உங்களுக்கு தெரிஞ்சிருக்காதுங்க.

அவர்: தெரியும்ங்க. அங்க எங்க சொந்தக்காரங்க இருக்காங்க.

நான்: (அது யாருடா, நமக்கு தெரியாம, நம்மூர்ல சிட்னில இருக்கிறவங்களுக்கு சொந்தக்காரங்க, என்று நினைத்தபடி கேட்டேன்) அப்படியா யாருங்க?

அவர்: பத்மாவதின்னு என் நங்கையாவோட அக்காங், அவிய பயன் கூட கேசவன்னு ஐகோர்ட்டில வக்கீலுங்க.

ஒரு நிமிடம் மயான அமைதி நிலவியது அங்கு. ஒன்றும் புரியாமல் எல்லோரும் எங்களையே பார்த்தனர்.

நானும், மனைவியும் குபீரென சிரித்துவிட்டோம்.

அந்தக்கேசவனே நாந்தானுங்க என்று சொன்னதும் அவங்க அனைவருக்கும் ஆச்சரியம்.

அந்தக்காலத்து பழைய சொந்தம் அவர்கள் என்று மட்டும் புரிந்துகொண்டேன்.

எல்லோரும் புகைப்படம் எடுத்துக்கொண்டு, விடைபெற்றோம்.

விஷயம் அத்தோடு முடியவில்லை.

இந்தியா வந்து ஊருக்கு போனதும், அம்மாவிடமும், சித்தியிடமும் அங்கு எடுத்த புகைப்படத்தை காட்டி, இது யாருன்னு தெரியுதா எனக்கேட்டேன்.

அவங்க ரெண்டு பேரும் ஒரே குரலில், அட இது நம்ம சொர்ணாம்பா என்று உடனே அடையாளம் கண்டு கொண்டனர். அதன்பின் அவங்க குடும்ப பின்னணியை எனக்கு அவர்கள் விளக்கிய போதுதான் பழைய நினைவுகள் ஒவ்வொன்றாக வந்தன

என் மிகச்சின்ன வயதில் என் பெரியம்மா வீட்டிற்கு பக்கத்து வீட்டில் அவர்கள் வசித்தது, நாங்கள் ஒன்றாக விளையாடியது எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக நினைவில் வந்தன. அதன் பின் சுமார் 50 வருடங்களாக தொடர்பின்றி போனதால் அடையாளம் தெரியவில்லை.

அதுசரி பக்கத்தூரு கிட்டு அண்ணன் ஒரு நம்பர் கொடுத்தாரே அந்த விஷயத்துக்கு இப்பவாவது வருவோம். அந்த நம்பருக்குரியவர் யாரா இருக்கும்னு வாட்ஸ்அப்பில் போய் அவர் நம்பரில் இருந்த டிபியில் அவர் புகைப்படத்தை பார்த்தேன்...

அடுத்த ட்விஸ்ட்!!!

அது பிரியாவின் கணவர் ஜெகதீஷ்.

ஆஸ்திரேலியாவில் இருந்தபோதே அவரிடம் பேசி இருந்தால் மேலே சொன்ன கதைகள் எல்லாம் தெளிவாகி இருக்கும். அப்படி பேசாமல், இந்தியா வந்தபிறகு தெரிந்து கொண்டதால், அங்கிருந்த போது அவர்கள் எல்லாம் யாரென்றே தெரியாமல், அவர்கள் வீட்டுக்கும் சென்றுவிட்டு வந்துவிட்டோம்.

ஆஹ... மொத்தத்தில் உலகம் ரொம்ப சிறுசு.

ஆனால் உறவின் எல்லைகளோ கண்டம் விட்டு கண்டம் தாண்டிக் கூட விரிகின்றன.



“தன்னம்பிக்கைச்
சிந்தனை”

எப்பொழுதும்
கவனமாகப்
பேச
வேண்டும்
ஏனென்றால்
எழுதியதைக்கூட திருத்தி எழுத
முடியும். பேசியதை...???

– சிந்தனைக் கவிஞர்
கவிதாசன்

# வரன் பார்க்கலாம்

## மணமகள் தேவை

எண்.136. பெயர்:K.Ashok Kumar, கூட்டம்: பனங்காடை பிறந்த தேதி:25/06/1995, நட்சத்திரம்: கார்த்திகை கல்வி: M.E.
தொழில்: Senior Technical (Medical Device)
பிறந்த இடம்/ நேரம்: Salem 09.07 A.M.
தொடர்பு: 99523 02325

எண்.148. R.Boopathy, கூட்டம்: விழியன், பிறந்த தேதி:29/08/1984, நட்சத்திரம்: அஸ்தம்
கல்வி: MCA தொழில்: Software Engineer
பிறந்த இடம்/ நேரம்: Salem 7.53 P.M.
தொடர்பு: 97909 64149, 90929 47778

எண்.149. பெயர்:K.Yasvant, கூட்டம்:ஆந்தை, பிறந்த தேதி:23/11/1995, நட்சத்திரம்: கேட்டை
கல்வி: B.Tech., M.B.A.,
தொழில்:Interior Designer
பிறந்த இடம்/ நேரம்: Chennai 09.56 P.M.
தொடர்பு: 99403 43499

எண்.150. பெயர்:R.Yuvaraj, கூட்டம்:பொருள் தந்த, பிறந்த தேதி:10/07/1995, நட்சத்திரம்: கேட்டை கல்வி: ME, தொழில்: CMRL Chennai
பிறந்த இடம்/ நேரம்: Salem 03.36 A.M.
தொடர்பு: 94435 49803, 95007 62411

எண்.151. பெயர்:K.V.Siva Suriyan, கூட்டம்:காடை, பிறந்த தேதி:03/02/1999, நட்சத்திரம்: பூரம்
கல்வி: B.A. L.L.B. (Hons) L.L.M. (ADR)
தொழில்: Legal Manager (Delhi Airport)
பிறந்த இடம்/ நேரம்: Salem 09.17 A.M.
தொடர்பு: 70105 24915

எண்.152. பெயர்:P.Karthi, கூட்டம்:பண்ணை, பிறந்த தேதி:17/11/1991, நட்சத்திரம்: உத்திரட்டாதி
கல்வி: B.Sc,ECS,
தொழில்: Medical Ltd., Company (Manager)
பிறந்த இடம்/ நேரம்: Chennai, 10.30.P.M.
தொடர்பு: 98416 26596, 95000 20466

எண்.153. பெயர்:S.Dinesh Kumar, கூட்டம்:தூரன், பிறந்த தேதி:28/11/1997, நட்சத்திரம்: விசாகம்
கல்வி: B.E. Mech, தொழில்: Designer
பிறந்த இடம்/ நேரம்: Salem 10.20 A.M.
தொடர்பு: 94441 26802, 87547 09046

## மணமகன் தேவை

எண்.147. பெயர்:R.ரம்யா, கூட்டம்:விழியன், பிறந்த தேதி:11/02/1993, நட்சத்திரம்: சித்திரை
கல்வி: B.E. (EEE), தொழில்: IT (Software)
பிறந்த இடம்/ நேரம்: Erode 07.09 A.M.
தொடர்பு: 99520 92347, 98650 92150

எண்.154. பெயர்:K.சங்கவி, கூட்டம்: பனங்காடை, பிறந்த தேதி:09/06/1999, நட்சத்திரம்: ரேவதி
கல்வி: M.Sc.,B.Ed., தொழில்: Teacher (Chennai)
பிறந்த இடம்/ நேரம்: Salem 11.04 A.M.
தொடர்பு: 99523 02325

எண்.159. பெயர்:N.நிகிதா, கூட்டம்:சாத்தந்தை, பிறந்த தேதி:26/04/1998, நட்சத்திரம்: அஸ்வினி
கல்வி: B.E., M.B.A., தொழில்:MNC (Bangalore)
பிறந்த இடம்/ நேரம்: Erode 09.47 A.M.
தொடர்பு: 93641 00550, 98405 42160

எண்.160. பெயர்:R.Krishetta, கூட்டம்:கண்ணன், பிறந்த தேதி:12/09/2000, நட்சத்திரம்: அவிட்டம்
கல்வி: BDS, தொழில்: Doctor
பிறந்த இடம்/ நேரம்: Chennai 10.33 A.M.
தொடர்பு: 93626 78789

எண்.161. பெயர்:S.காவியப்பிரியா, கூட்டம்:கண்ணன், பிறந்த தேதி:09/08/1996, நட்சத்திரம்: மிருகசீரிடம், கல்வி: B.Tech (CS), தொழில்: Product Manager (Bangalore)
பிறந்த இடம்/ நேரம்: Namakkal 04.31 P.M.
தொடர்பு: 95000 84565, 95000 74565

எண்.162. பெயர்:Dr.S.செல்வஸ்ரீ ராகவி, கூட்டம்:வெண்டுவன்,
பிறந்த தேதி:12/02/2001, நட்சத்திரம்: சித்திரை
கல்வி: BDS, தொழில்: Dental Doctor
பிறந்த இடம்/ நேரம்: தாராபுரம் 03.00.P.M.
தொடர்பு: 79043 76331

எண்.163. பெயர்:S.ஸ்ரீமதுமதி, கூட்டம்:தோடை, பிறந்த தேதி:19/11/1999, நட்சத்திரம்: உத்திரட்டாதி
கல்வி: B.Com. (MBA), தொழில்: Management Trainer (Bangalore)
பிறந்த இடம்/ நேரம்: Salem 01.26 P.M.
தொடர்பு: 99403 37785, 96770 49570



**Published & Edited by:**
The President on behalf of Kongu Nanbargal Sangam, Velli Vizha Illam,
No. 34 Srinivasa Perumal Sannathi 1st Street, Royapettah, Chennai - 600014.

**Printed by:**
M.Shaik Dawood, Dawood Graphics,
No. 63, Muthu Mudali Street, Royapettah, Chennai - 600 014.

# சென்னை மெட்டெக்ஸ் லேப் பி.லிட்
# CHENNAI METTEX LAB PRIVATE LIMITED®

*Where Test Inspires Trust...*

**Registered Office : Jothi Complex, No.83, MKN Road, Guindy, Chennai - 600 032, Tamilnadu, India**

**Contact : 86869 74749 | 044 - 2232 3163 / 4217 9490**

**ISO 17025:2017 NABL ACCREDITED** | **TESTING LABORATORY** | **WATER, FOOD PRODUCT AND ENVIRONMENTAL**



Stability Chamber

Accreditations / Approvals : ISO 17025 : 2017 NABL TC - 5589

NABL ACCREDITED · fssai · TEA BOARD INDIA · APEDA · Assisted By : MOFPI MINISTRY OF FOOD PROCESSING INDUSTRIES GOVERNMENT OF INDIA

Stability is the Capability Of a specific formulation in a particular container closure system to remain within its physical chemical, microbiological, toxicological,the rapeutic specifications at a defined storage condition stability is expressed in terms of shelf Life.

| S.No | Study | Storage condition | Minimum time |
|---|---|---|---|
| 1 | Accelerated | 40º C ± 2º C | 75 % RH ± 5% RH 6 months |
| 2 | Long Term | 30º C ± 2º C | 60 % RH ± 5% RH12 months |



Water Activity Meter

- Physio-Chemical Testing
- Microbiological Testing
- Heavy Metals
- Toxin Analysis



**Sample Collection Centre :-**

www.mettexlab.com

**ERODE : 89398 72544 | 72990 59215 | COIMBATORE : 98410 53041 | PUDUCHERRY : 95512 50027**
**MUMBAI : 89398 72540 | BANGALORE : 89399 90282 | COONOOR : 89399 98324**

REGD. NEWS PAPER / Posted on **17.05.2025**
Posted at Egmore RMS/1 (Pattrika Chennai) | CHENNAI KONGU NANBARGAL MALAR / சென்னை கொங்கு நண்பர்கள் மலர்
Registration Number of the Newspaper: TNTAM/2016/69320 | Postal Reg No. TN/CH(C)/602/2025-2027
Date of Publication Second Week of every month




அனுப்புதல்
சென்னை கொங்கு நண்பர்கள் மலர்
கொங்கு நண்பர்கள் சங்கம்
வெள்ளி விழா இல்லம்
எண்.34, சீனிவாசப் பெருமாள் சன்னதி
முதல் தெரு, இராயப்பேட்டை,
சென்னை- 600 014.

பெறுநர்